"அன்பு அறிவு அகமகிழ்வோடு
இன்புற்றிருப்போம் எல்லோரும்"

# சுதந்திரன்

கலை, இலக்கிய, சமூக ஏடு.

மலர் - 5 - 1998 புரட்டாதி - ஐப்பசி



யாழ். நகரில்!....        முதன் முதலில்!....

## ஜப்பானிய தொழில்நுட்பக்கூடம்!

★ கொம்பியூட்டர் முறையில்
படச்சுருள்களைக் கழுவித்தருவோம்!



★ உங்கள் அழகிய
உருவங்களை
அற்புதக்கலையாக
புகைப்படங்களில்
வீடியோவில்
அள்ளிவழங்குவோம்.

## SUPER SHOW VIDEO

## சுப்பஸோ வீடியோ

No. 100 A, STANLEY ROAD, JAFFNA.

புகைப்படம் எடுப்பதிலும், வீடியோ படங்கள் எடுப்பதிலும்
வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பெற்ற கலைஞர்கள்
எங்கள் கைவசம் - உங்கள் சேவைக்காக...!

அமரர்

## க. கனகராசா

(மில்க்வைற்)

அவர்களது

மறைவு குறித்து

# அஞ்சலி

## மறக்க முடியாத மாமனிதன்

புல்லையும் நேசித்தவன் நீ
வள்ளுவன் சொல்லையும்
நேசித்தவன்!

கொடி செடி வேர்களையும்
உந்தன்
உறவாக்கிக் கொண்டாய்!
மரங்களைக் காப்பாற்ற
மன்றாடினாய்!
குளம் தோண்ட
வேண்டுதல் செய்தாய்!

ஓடும் பஸ்ஸிலெல்லாம்
திருக்குறளையும்
பயணம் செய்ய வைத்த
பெரியவன் நீ!

வியாபாரிகளுக்கும்
ஔவையாரை
அறிமுகம் செய்து வைத்த
வித்தியாசமானவன் நீ!

வெற்றுக் கால்களால்
பூமியில் நின்று கொண்டே
விண்ணைத் தொட்ட
அதிசயன் நீ!

மனிதர்கள்
உன்னை மறந்து விடலாம்!
நெடுத்துயர்ந்த மரங்கள்
நீடித்து வளரும் வரை
நீயும் உயர்ந்து நிற்பாய்!
இம்மண்ணின்
விழுதாய் வேர்விடுவாய்!

# சுந்தரன்

கலை, இலக்கிய, சமூக
மாதாந்த ஏடு.

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இதழ் 5
புரட்டாதி 1998

நெறியாள்கை:
சொக்கன்
சிவராமலிங்கம்
செங்கை ஆழியான்

ஓவியம்:
ரமணி

இணை ஆசிரியர்:
த. ஜெயசிலன்

ஆசிரியர்:
கௌதமன்

வெளியீடு:

போஸ்கோ பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விலை: 15/-


## புதைபொருள்

ஆனைக்கோட்டையில்
ரகுபதி தோண்டிய
பெருங்கற் பண்பாட்டின்
கோவேத பரம்பரை

தன்
நவீன வரலாற்றை
தோண்டவும் வல்லமைகெட்டு
வேண்டுதல்கள் செய்யும்...

மனித உரிமையை
எலும்புக்கூடாகவேனும் காண
உலக அமைப்புகளும்
அறிக்கைவிடும்.

தோண்டியுமென்ன...
காணாமல் போனவர்
ஐந்தொகைக் கணக்குமட்டும்
சரிப்படலாம்.

சனநாயகமும் மனித உரிமையும்
'சமாதானமும் தான்'
புதைகுழிகளுக்குள் கிடைப்பதில்லை.....

அநியாயங்கள்
புதைக்கப்படும்வரை
வரலாறுகள் திருந்துவதில்லை.

- சண்முகபாரதி



# பலாத்தகாரம்தான்!

வெட்கமிழந்த வெறிநாய்கள்
வீதிவழியே கூடித்திரிவதும்;
எருமைகள்
கூட்டம் கூட்டமாய் வழிமறித்து
கழிவகற்றுவதும், கால்நீட்டி
உடல்பிரட்டி மல்லாந்து புரள்வதும்,
மனிதர்கள் தூரத்தள்ளி
விலகிப்போவதும்
காட்டுத் தெருக்களிலே!
இன்று!
கோயில் விழாக்களிலே
கோலாகல நிகழ்ச்சிகள்!

தீர்த்தக் கேணியிலே
பக்தர்கள் மட்டுமல்ல
சேற்றுப் பண்டிகளும் தீர்த்தமாடுகின்ற
காட்சி 'கண்கொல்'லாக்காட்சி!

போர்த்திருந்த ஆடைக்குள்
தீர்த்த நீரள்ளி - சாக்கடையாக்கி
இளம்பெண்கள் மீது வீசிவிளையாடும்
கயமைத்தனத்தின் உச்சி!
பேதையர் என்று பெரியோர்
வழிவிலகிப் போகின்றனர்!

கன்னத்தில் அறைந்தவனையும்
கல்லால் அடித்தவனையும்
ஆணிஅடித்து உயிரை வதைத்தவனையும்
மன்னித்தார் யேசு!

ஆலயத்தை அசுத்தப்படுத்தியவனை
சாட்டையால் தாக்கினார்.

கொடிய சாத்தான்களுக்கு
வேதம் விளங்காது!

நாட்டுக்குள் திரியும்
நாசகார மிருகங்கள்
பேணிக்காப்பதற்கல்ல,
வேட்டையாடப்படவேண்டியன.

இந்த மிருகக் கூட்டங்களை
வீதிவழியே பிரசவித்த பேய்கள் எங்கே?
இழிவான எச்சில்களை
துப்பிவிட்ட துரோகிகள் எங்கே?

கோயில் அயலெல்லாம்
'பண்பாடு காருங்கள்' என்று
விடாமலொலித்த குரல்
காமக்கட்டை இறுக்கிய
காதுகளுக்குச் சேருமா?

இங்கே
புழுப்பிடித்த சமூகத்திலிருந்து
புத்தம்புதிய பூக்களை
பிரசவிக்கத்தக்க மருத்துவிச்சி
'கால்மாக்ஸி'ன் பலாத்தகாரம்தான்! ●

# இனி எப்போ வருவாரோ?

**. சிரிகதை**

வெளியே நாய் குரைத்துக் கொண்டிருக்க குழந்தைகள் இருவரும் தமிழர் போராட்டங்கள் போல் தொடர்ந்தும் விடாமல் அழுதுகொண்டிருந்தார்கள். ஊர் அடங்கிவிட்டது. குழந்தைகளின் அழுகைச்சத்தம் இரவு நேரத்தில் பெரிதாகக் கேட்டது. நாங்கள் நன்றாக நித்திரை கொண்டு கனநாட்கள் ஆகிவிட்டன.

எங்களுக்கு உதவிக்கு மாமன், மாமி, மச்சான், மச்சாள் இல்லாத வீடு எப்படியிருக்கும்? நான் மகளை காலில் வைத்து ஆட்டியபடி பயமுறுத்தினேன்.

'' அங்க. உம்மாண்டி வருகுது. யன்னலுக்கால எட்டிப் பாக்குது. கண்ணை மூடிக் கொண்டு படுங்கோ.''

''என்னப்பா, பிள்ளையை உப்பிடிப் பயமுறுத்தாதையுங்கோ. அவையளுக்கு மன நிலை பாதிச்சுப்போடும்.''

மனைவியோ விஞ்ஞான, கணித ரீச்சர். தான் படிச்சதை நினைவூட்டினாள்.

'' சும்மா ஒரு வெருட்டுத்தானே. இவையள் நித்திரை கொள்ளுகினம் இல்லையே. எனக்குப் பகல் முழுக்க வேலை செய்து நித்திரை கண்ணைச் சுழட்டுது.''

நாற்சார் முற்றத்தில் மகளைத் தோளில்போட்டு உலாத்தியபடி நின்ற மனைவி என்னைப் பார்த்தாள்.

''என்ன செய்யிறது, எங்கட பிள்ளைகளை நாங்கள் தான் வளக்கவேணும். கடவுள் இரண்டு குழந்தைகளைக் கொடுத்திட்டான்.''

மனைவியிடமிருந்து நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

''அப்பா ஒரு விசயம் தெரியுமே?''

கம்பியில் தொங்கிக்கொண்டிருந்த அரிக்கன் லாம்பின் திரியைத் தூண்டிவிட்டு மனைவி கேட்டாள்.

''எனக்கென்னப்பா தெரியும் சொல்லுமன்''

''சைக்கிள்கடை ஆனந்தர் வந்தவர். நேற்று இராத்திரி பதினொரு மணிக்குக் கோழி பிடிக்கக் கள்ளன் வந்தவனாம்''

மனைவி சொல்ல நான் திடுக்கிட்டேன்.

''எ...ன்...ன உண்மையாவே? அதான் இராத்திரி விடாமல் நாய் குலைச்சது''

''அவையள் நாய் குலைச்சதில ரோச் லைற் பிடிச்சு அமளிப்பட கள்ளன் ஓடிட்டானாம். பிறகு பக்கத்து வீட்டு பேபி வீட்டில கோழியளைப் பிடிச்சுக்கொண்டு போயிட்டானாம்''

எனக்கு எங்களுடைய கோழிகளைப் பற்றி யோசனை வந்தது. அயல்வீட்டுக்குப் போன கள்ளன் எங்கட வீடு வராம விடுவான் என்பது என்ன நிச்சயம்?

'' நாங்களும் கவனமாகத்தான் இருக்கவேணுமப்பா''

'' இது என்ன கஸ்டம்; இடையில கொஞ்ச நேரம்தான் நித்திரை கொள்ளுறனாங்கள். அதையும் வாற கள்ளனுக்காகத் 'தியாகம்' செய்யவேண்டியதுதான்.''

குழந்தைகளிருவரும் நித்திரையாகி விட்டார்கள். அவையளுக்குப் பக்கத்தில் நாங்கள் படுத்துக்கொண்டோம். தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது.

''என்னப்பா கள்ளன்தான் வாறானோ?''

''பேசாமல் படும்! நேற்று வந்த கள்ளன் உடனேயே எங்கடவீட்டுக் கோழியையே பிடிக்க வரப்போறான்? தன்ர 'ஏரியா' முடிச்சுத்தான் வருவான்''

''உங்களுக்கு விசர். அவனுக்கென்ன வசதியா இடமிருந்தா வந்திடுவான். அதுவும் நாங்கள் இரண்டுபேர்தான் இருக்கிறம் எண்டு எல்லாருக்கும் தெரியும். வாற கள்ளனும் தூரத்திலிருந்தே வரப்போறான்? எல்லாம் ஊர்க் கள்ளன்தான்''

படுத்திருந்த மனைவி உடன் துள்ளியெழுந்தாள்.

''எனக்கு நித்திரை வருகுதில்லை. கொஞ்சக் கணக்குப் பேப்பர் திருத்தவேணும். ஏன் சும்மா கிடப்பான்?''

மனைவி மேசை விளக்குக் கொளுத்தி கணக்குப் பேப்பர் திருத்தத் தொடங்கி விட்டாள்.

''என்ன நீர் கள்ளனுக்குப் பயப்படுறீரோ?''

''பயப்படாமல் என்ன செய்யிறது?''

''எனக்கென்னமோ கள்ளன் வாறதை நினைச்சா சந்தோசமாக இருக்கு''

மனைவி என்னை அதிசயப் பிராணியைப் பார்ப்பதுபோல் பார்த்தாள்.

''எ...ன் னப்பா சொல்லுறியள்?''

மனைவி F.M. மீற்றரில் அலறினாள்.

''எங்கள் சொந்தம் பந்தம் எண்டு யார் வந்து பார்க்கினம்? ஒருத்தரும் வாறேல்ல. இப்ப கோழிக்கள்ளனாவது வாறானே என நினைக்கச் சந்தோசமாகக் கிடக்கு''

மனைவி எனக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் முழித்தாள். வாய் எதையோ திட்டித் தீர்த்தது.

''யாரை வாய்க்குள்ள திட்டுறீர்?''

''அடிவயிறு நோகக் கத்திப் படிப்பிச்சாலும் அவனுக்கு ஒண்டும் ஏறாது. சுப்பிரமணியத்துக்கு என்னத்த விளங்கப்படுத்தினாலும் எல்லாம் பிழை. நெடுக முட்டைதான்.''

''சரி, உதுக்கேன் நோகிறீர்? இப்படி நெடுக அவனுக்கு முட்டை போடாதேம். அவன்ர வீட்டில நினைக்கப்போயினம் ரீச்சர் வீட்டுக் கோழி நெடுக முட்டைபோடுதுபோல; அதால தான் ரீச்சருக்கு முட்டைபோடுறது பழக்கமாகிவிட்டதெண்டு''

மனைவிக்கு அதற்குமேல் பேப்பர் திருத்தமுடியவில்லை. மேசை விளக்கை அணைத்து விட்டுப் படுத்துவிட்டாள்.

நாய்கள் தொடராகக் குரைக்கும் சத்தம் கேட்டது.

''என்ன, இன்னும் கள்ளனைக் காணேல்ல!''

''சும்மா அலம்பாமல் விளக்கைக் குறைத்துப்போட்டுப் படுங்கோப்பா. பிள்ளையளும் பன்ரண்டு மணிக்கு வழக்கம்போல முழிப்பினம்''

நான் விளக்கைக் குறைத்து விட்டு படுத்துவிட்டேன். நேரம் செல்லக் கண்ணயர்ந்துபோக தம்பி வீரிட்டு அழுதான். என்ன காரணமென்று தெரியவில்லை.

''என்ன நடந்தது?''

''இருந்தாப்போல அழுகிறான், விளக்கைத் தூண்டுங்கோ ஏதேனும் குத்திப்போட்டுதோ?''

''கனவுகண்டு பயந்திட்டான் போல''

நான் தம்பியைத் தோளில் வைத்து தட்டி அழுகையை நிற்பாட்டுவதற்குள் தங்கச்சி நித்திரை குழம்பி அழத்தொடங்கினாள். எல்லாம் 'பாராளுமன்ற' அமளியாகிவிட்டது.

''கடவுளே! என்ன செய்யிறது; சாமியறைக்குள்ள போய் விபூதி எடுத்தாங்கோ''

நான் ஓடிப்போய் விபூதி எடுத்துவந்து தம்பியின் முகம் உடம்பெல்லாம் தடவிவிட்டேன். இருவரும் குழந்தைகளைத் தோளில் வைத்து முதுகில் தட்டியபடி உலாத்தினோம்.

''இந்த அமளியில கள்ளன் வந்து கோழியளைப் பிடிச்சுக் கொண்டு போனாலும் தெரியாது''

''சம்மா வாயை மூடிக் கொண்டு குழந்தையை நித்திரையாக்குங்கோ''

''நேரமும் பதினொரு மணிக்கு மேலாகிவிட்டது. இந்த நேரத்திலதான் கள்ளனும் வருவான்''

''ஐயோ, புண்ணியம் கிடைக்கும், அழுகையை நிப்பாட்ட ஏதாவது வழி பாருங்கோ''

ஒன்றும் செய்தும் பிரயோசனமில்லை. நான் பொறுமையை இழந்தேன்.

''அங்க, அங்க பாருங்கோ, யன்னலுக்கால உம்மாண்டி எட்டிப் பாக்குது. பேசாமல் படுங்கோ, பிடிச்சுக்கொண்டு போயிடும்''

எனக்கு ஏதோ சொல்ல வாயெடுத்த மனைவி பேசாமல் இருந்துவிட்டாள். நான் யன்னலைக் காட்டி மறுபடி சொல்ல முற்பட்டபோது அங்கே யன்னலுக்கு வெளியே 'பெரிய' தலை தெரிந்தது. உடம்பு நடுங்கியது.

''யாரோ நிக்கிறது மாதிரித் தெரியுது'' மனைவி காதில் கிசுகிசுத்தாள்.

''யாரோ நிக்கிறது மாதிரித் தான் கிடக்குது. கோழிக் கள்ளனோ தெரியாது. நாங்கள் அவனைக் கவனியாத மாதிரி இருப்பம்''

---


கள்ளன்:- (கத்தியைக் காட்டி) கையில இருக்கிற கத்தியைப் பார்; மரியாதையா இருக்கிற பணத்தைத் தந்திடு.

வட்டிக்காரன்:- உந்த பழங்கத்திக்கு எந்த மடையன் காசு குடுப்பான்? வேறை ஏதாவது நல்ல பொருளாய்க் கொண்டு வா.

கள்ளன்:- ? ? ?

சு. சிவராசா

## சி. கதிர்காமநாதன்



"கோழிக்கள்ளனெண்டால் கோழியைப் பிடிச்சுக்கொண்டு போகாமல் யன்னலுக்கால நிண்டு ஏன் எங்களைப் பாத்துக் கொண்டு நிப்பான்?"

"நேர்மையான கள்ளனாக்கும். கோழியைப் பிடிச்சுப்போட்டு எங்களிட்ட சொல்லிட்டுப்போக நிக்கிறானாக்கும்." மனைவி முகத்தில் எல்லாவகையான குண்டுகளும் வெடித்தன.

"உங்களோட கதைக்கிறதை விட... தங்கச்சியை நித்திரையாக்குங்கோ."

நான் சுடைசியில் பாடத் தொடங்கினேன்.

"ஆராரோ யார் இவரோ
ஆராரோ யார் இவரோ
மாமி அடித்தாளோ
மல்லிகைப் பூச்செண்டாலே
அத்தை அடித்தாளோ
அணைத்தெடுக்கும் கையாலே
.................... .......... .
கோழிக்கள்ளன் அடித்தாரோ
கோழி பிடிக்கும் கையாலே."

கடைசி வரி எப்படி வந்ததென்று எனக்கே தெரியவில்லை. மனைவி ஆத்திரத்துடன் என் மேல் பாய்ந்தாள்.

"உங்கட வாயால என்னமோ நடக்கத் தான் போகுது" மனைவி சொல்ல எனக்கு உடம்பு நடுங்கியது. சிலவேளை வந்த கள்ளன் பொல்லாதவனாய் இருந்தால்......

என் பயத்தைப் போக்க வாய் சும்மா இருக்கவில்லை.

"கடவுளே! குழந்தைகளை நித்திரையாக்கிவிடு: எங்களுக்கு

உதவிக்கு ஒருவருமில்லை. நாங்கள் தனியாக்கள். நாங்களும் நித்திரை கொள்ளவேணும். ஊரில இரவில கள்ளன் வாற தெண்டு கதை அடிபடுகுது நாய்கள் குலைக்குது. எங்களுக்கு கள்ளனைக் கண்டால் பயமில்லை, சந்தோசமே. எங்களுக்கும் இரவில துணைதானே. அவர் எப்ப வருவாரோ?''

ஏதோ வாய் குழறியது.. என் புலம்பல் ஓய வெளியே சத்தம் கேட்டது.


''ஐயா! அம்மா! யன்னலுக்கால என்னைப் பாருங்கோ''

கள்ளன்தான் எங்களைக் கூப்பிடுகிறான். என்ன ஆச்சரியம், இருந்தும் கள்ளனை நெருங்க கால்கள் தயங்கியது.

''போய் கதவைத் திறவுங்கோ!''

மனைவி சொன்னாள். இருவரும் போய் கதவைத் திறந்தோம். கள்ளன் உள்ளே வந்தான் (ர்)

''நீங்கள்......'' எனக்குத் தொண்டை கட்டியது.



''நான் கோழி பிடிக்கத்தான் வந்தனான். கனநேரமாய் உங்கட கஸ்டத்தைப் பாத்துகொண்டு தான் நிக்கிறன். நீங்கள் இரண்டு பேரும் நல்லா களைச்சுப் போனியள். ஒரு குழந்தையைத் தாங்கோ, நான் நித்திரையாக்கிறன்''

அந்த இரவு நேரத்தில் கள்ளன் 'அரசியல்வாதிகள்' போல் அல்லாமல் தெளிவாகப் பேசினான்.

''பிள்ள பயப்படும் உங்களைப் பார்த்தால்''

''நீங்கள் தாங்கோவன் பாப்பம்''

அவன் தம்பியை வாங்கி தோளில் வைத்து தட்டத் தொடங்கினான்.

''என்ர குஞ்சு, என்ர பேடு, என்ர சேவல் நித்தாக் கொள்ளுங்கோ. அப்பதான் பிடிக்கலாம். சீ படுக்கலாம்''

அவன் தான் பரம்பரைத் திருடன் என்பதை நிரூபித்தான். சிறுநேரத்தில் தம்பி நித்திரையாகிவிட்டான். அடுத்து தங்கச்சியையும் வாங்கினான். நித்திரையாக்கினான்.

நாங்கள் மலைத்துப்போய் நின்றோம்.

''என்ன மலைச்சுப்போய் நிக்கிறியள்? நான் பரம்பரைத் திருடன். எங்கட பரம்பரையே கோழி, முட்டை திருடுறது தான். எங்கட பிள்ளையள் பள்ளிக்கூடத்தில சோதனையில முட்டை வாங்கினால் எங்களுக்கு நல்ல சந்தோசம். அவன் பின்னால நல்ல கள்ளனா வருவனெண்டு நம்பிக்கை''

நான் மெல்ல மனைவியின் காதில் கிசுகிசுத்தேன்.

''என்ன நீர் முட்டை போட்ட சுப்பிரமணியத்தின்ர அப்பா இந்த ஆளா இருக்குமோ?''

''கேட்டுப்பாருங்கோ''

நான் கேட்டேன்.. கள்ளன் மனைவியின் காலில் நெடுஞ்சாணாக விழுந்தான்.

''என்ர பெடியனுக்கு முட்டை போட்டு அவனை பெரிய ஆளா வழிகோலியவர் நீங்கதானே அம்மா.. கடவுளே! நான் உங்கட வீட்டையா திருட வந்தன்? தெய்வம் என்னைத் தடுத்துவிட்டது. நான் உங்களுக்கு உதவிசெய்ய வேணும். விடியுந்தனைக்கும் நான் உங்கட குழந்தையளைப் பாத்துக்கொள்ளுறன். நீங்க நித்திரை கொள்ளுங்கோ''

நாங்கள் படுத்தால்போதும் என்ற நிலையிலிருந்தோம். படுத்ததுதான் தெரியும், விடியும் நேரம் கள்ளன் எங்களை எழுப்பினான்.

''ஐயா! அம்மா! நல்லா நித்திரை கொண்டியள். நான் வாறன். நேரம் கிடைச்சா நான் வந்து உதவி செய்வன் ஐயா! என்னைச் சொந்தக்காரனாக நினைச்சதை நான் மறக்க மாட்டன். இந்தப் பேட்டுக் கோழியை வைச்சுக் கொள்ளுங்கோ. முட்டை போடும். அதைப் பிள்ளையளுக்குக் குடுங்கோ. அம்மா! என்ர மகன் சுப்பிரமணியத்தை நல்லாக்கிவிடுங்கோ. நான் போட்டு வாறன்.''

''இந்தக்கோழியை கொண்டு போ; வேண்டாம்!''

''என்ர ஞாபகத்துக்கு வைச்சுக்கொள்ளுங்கோ''

''ஐயோ! யாற்ர வீட்டுக் கோழியோ தெரியாது''

நன்றாக விடிய, நடந்ததெல்லாம் ''சமாதானப் பேச்சு வார்த்தைகள்'' போல் நம்ப முடியாமல் கனவு மாதிரி இருந்தது. அதேநேரம் வெளியே சைக்கிள் கடை ஆனந்தரின் மனைவி ''என்ர பேட்டுக் கோழியைக் காணேல்ல'' என்று கத்தியபடி ஓடிவருவது கேட்டது.

●

(யாவும் சிந்தனை)

---

மகன்:- அப்பா! மகன்களுக்கா, அப்பாக்களுக்கா அறிவு கூடுதலாக இருக்கு?

அப்பா:- அப்பாக்களுக்குத் தான்.

மகன்:- அப்படியா! அப்பா, றேடியோவைக் கண்டுபிடிச்சது யார்?

அப்பா:- மார்க்கோனி.

மகன்:- அதை ஏன் அவங்க அப்பா கண்டு பிடிக்கல?

அப்பா:- ? ? ? ? ?

**T. லவனி**
கைதடியூர்.

---

## ஏக்கம்...

- சின்னை. காண்டீபன்

ஜன்னல் நதிக்கரையில்
வாடியிருக்கும்
பருவ நாரைகள்,
நாங்கள்!
பண நீர் இல்லாமல்
வற்றிக்கிடக்கும்,
எங்கள்,
வாழ்க்கை தரையை
குளிர்விக்க,
'வான் மழையாக'
பலன் எதிர்பாராமல்
யார் வருவார்...?

# 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி 4 ற்கான விடைகள்

1. இலங்கையில் வெந்நீர் ஊற்றுக்கள் கன்னியாவில் உள்ளன.
2. மத்தியதரைக் கடலையும், செங்கடலையும் இணைக்கின்ற கால்வாய் சுயெஸ் கால்வாய் ஆகும்.
3. பாக்கு நீரிணையை முதன்முதலில் நீந்திக் கடந்தவர் நவரெத்தினசாமி ஆவார்.
4. நல்லூர் கந்தசுவாமி கோயிலை முதன்முதலில் கட்டியவர் புவனேகபாகு ஆவார்.
5. ரிசபம் என்ற இராசியின் வடிவம் எருது ஆகும்.
6. வங்காளதேசத்தின் நாணயத்தின் பெயர் ரூபா ஆகும்.
7. கடைசியாக அணுகுண்டுப் பரிசோதனை செய்தநாடு பாகிஸ்தான் ஆகும்.
8. 1998 உலகக்கிண்ண உதைபந்தாட்டம் நிகழ்ந்த நாடு பிரான்ஸ் ஆகும்.
9. மிகச் சிறிய கோள் புதன் ஆகும்.
10. ஒரு கலனில் 4.55 லீற்றர்கள் உள்ளன.

**10 விடைகளையும் சரியாக எழுதிய நால்வருக்கு இப்பரிசு பங்கிடப்படுகின்றது. இவர்களுக்கு சுந்தரனின் பாராட்டுகள்.**

நடராசா மனோகர்
560/1, 'புதுவளவு'
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

**அருந்ததி கனகரட்ணம்**
ஆண்டு 10
சென்ற் ஆன்ஸ் றோ. க. த. க.
பாடசாலை

செல்வன் இ, பிரசாந்தன்
மே/பா. திருமதி தா. இராஜசிங்கம்
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.

செல்வி சுகந்தி குணரட்ணம்
இல. 444, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப்பெறும் நேயர்கள்:**

ஞா. கிருபதீசன்
கைதடி மேற்கு,
கைதடி

செல்வி வா. சசிகலா
நேவவத்தை,
கைதடி மேற்கு.

செல்வி ஞா. நளினி
கைதடி மேற்கு,
கைதடி.

**P.** கம்சநதி
இல. 62, செட்டித்தெரு,
நல்லூர்.

# தட்டுங்கள்....

# திறக்கப்படும் ?!?!?!?



செல்வன் உமாகாந்
சுண்டிக்குளி.

? செம்மணி புதைகுழி தோண்டப்படுமா?

! 'மனிதத்தை' புதைத்து வைத்திருக்கும் மனங்கள் தோண்டப்படாதவரை எம்மண்ணில் செம்மண் தரித்த 'செம்மணிகள்' தோன்றிக்கொண்டேதானிருக்கும். இதைத் தோண்டினால் நாய்க்கும் நரிக்கும் படையல் வைக்கலாம். அழுகிய தசைகளையும் எலும்புகளையும் அள்ளிப்போடலாம். வேறென்ன உயிர்ப்புதையலா கிடைக்கும்! ஏங்கித்தவிக்கும் இனத்தவர்க்கு.

●

ஞா. நளினி,
கைதடி மேற்கு.

? பகிடி வதை, சித்திரவதை இரண்டிற்கும் வேறுபாடு யாது?

! பகிடிவதை என்பது பசு போன்றது; சித்திரவதை என்பது புலிபோன்றது. தற்போது புலி பசுத்தோலுக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டு அட்டகாசம் செய்கிறது.

●

வா. சசிகலா,
கைதடி.

? தற்போதைய அணுவல்லரசு நாடுகள் யாவை?

! மூன்றாவது உலகயுத்தம் ஒன்று தோன்றினால்தான் சரியாக தெரியவரும். ஆனால் அதைத் தெரிந்துகொள்ள நானும், நீரும் இருப்போமோ, இல்லையோ?

●

வி. அமுதா,
யாழ்ப்பாணம்.

? அறிவு, ஞானம் வேறுபாடென்ன?

! ஞானத்தைத் தேடுகின்ற ஒரு பேரவாவினை அறிவு ஏற்படுத்துவதோடு அதனைத் தர வல்ல 'குரு'வினை அடையாளம் காணவும் உதவுகிறது. ஆனால் அறிவின் முதிர்ச்சி ஞானமாகாது. அறிவுக்கு முதிர்ச்சி கிடையாது. ஞானத்திற்கு அப்பால் ஏதும் கிடையாது.

அறிவினால் ஞானம் சாத்தியப்படாது.
ஞானத்திற்கு அறிவு அவசியப்படாது.

●

சி. கலைவாணி,
நல்லூர்.

? 'எயிட்ஸ்' வந்திராவிட்டால் பூமி திருந்தியிருக்குமா?

! இப்போதென்ன பூமி திருந்திவிட்டதா? அடக்கடவுளே! 'எயிட்ஸ்' வாழ்க!

●

ப. தெய்வேந்திரன்,
யாழ்ப்பாணம்.

? தங்கள் தவறுகளுக்கெல்லாம் விதியின்மேல் பழியைப் போட்டுவிட்டு தப்பித்துக் கொள்பவர்கள் பற்றித் தங்கள் அபிப்பிராயம்?

! எல்லாப் பழிகளும் அவரைப்போட்டு மிதிக்கும்போது, அதுவும் விதி என்று ஒத்துக் கொண்டால் சரி.

●

? கல்வியில் மனிதன் பூரணமடைகிறான். காதலில் மனிதன்...?

! பூரணமாகத் தன்னை இழக்கின்றான்.

●

? காதலித்து மணம் முடித்தவர்கள் தங்கள் பிள்ளைகள் காதலிப்பதைத் தடுக்கிறார்களே, உண்மையில் 'காதலுக்கு மரியாதை' உண்டா?

! எந்தப் பெற்றோரும் தாம் விட்ட தவறு களைப் பிள்ளைகளும் விடக்கூடாது என்று நினைப்பது நியாயம் தானே!

●

? பெண்ணுரிமை சாதித்தது என்ன?

! காவாலிகளின் காட்டுமிராண்டித்தனங்களுக் குப் பயந்துதானே ஆகவேண்டியுள்ளது. நம்மூர்ப் பெண்கள் கட்டாயமாகத் தற் பாதுகாப்புக் கலை கற்றிருக்க வேண்டும்.

●

? உலகின் ஏற்றத்தாழ்வுகள் என்றும் மறையாது என்கிறேன். என்ன சொல்கிறீர்?

! உலகம் உருண்டை வடிவமானது என்பதை ஒத்துக்கொள்கிறீரா? உருண்டை வடிவமான பந்தொன்றின்மேல் நிற்பதாகக் கற்பனை செய்துகொள்ளும். அப்பந்தின் ஒரு இடத் தில் நின்று மற்றைய பகுதியைப் பார்த்தால் மற்றவையெல்லாம் தாழ்ந்த பகுதியாகத் தெரியும். தாழ்வாகத் தெரிந்த பகுதியில் நின்று மற்றைய பகுதிகளைப் பார்த்தால் நிற்கின்ற பகுதி உயரமாகவும் ஏற்கனவே உயரமாகத் தெரிந்த பகுதி தாழ்வானதாக வும் தெரியும். உயர்வும், தாழ்வும் எமது பார்வையின் தவறுகள். ஒரு விஷயத்தில் நீர் உயர்ந்தவனாக இருப்பீர். மற்றவர் தாழ்ந் திருப்பார். இன்னொரு விஷயத்தில் நீர் தாழ்ந்திருப்பீர். மற்றவர் உயர்ந்திருப்பார். இறைவனின் படைப்பில் எல்லாம் சம நிலையே.

●

# கருணை...



எவ்வளவு ஆனந்தம் அமைதி
அந்த சந்திரனில்!
வறியவனைப்போல்;
அவனது மங்கிய ஒளிச்செல்வம்
அவனை கருணையோடு
காணச்செய்கிறது!

அதோ அந்த சூரியனுக்குத்தான்
எவ்வளவு கர்வம்
சுட்டெரிக்கும்
ஆணவம்
அவன் செல்வன் என்பதில்!

என்னை
வறியவனாகவே வாழவிடு!
நான் கருணையோடு
தொடர்ந்திருக்க!

**வி. உதேஸ்**
நாவற்குழி.

இறைவன்:- பக்தா! உன் தவத்தை மெச்சு கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள், தருகிறேன்.

பக்தன்:- இறைவா! எனக்கென்று சொந்தமாக ஒரு காமதேனுவும் சமுத்திரமும் வேண்டும்.

இறைவன்:- காமதேனு .. .. சரி. சமுத்திரம் எதற்கு?

பக்தன்:- பாலிலே நீரைக் கலந்து விற்பதற்குத் தான்.

T. லவனி
கைதடியூர்.

● ● ●

மனைவி:- நான் பாட்டுப்பாட ஆரம்பித்ததும், நீங்கள் ஏன் வெளியில் போய் நிற் கிறீர்கள்?

கணவன்:- பக்கத்துவீட்டில் இருப்பவர் பாட்டுப் பாடுவது நான் என்று நினைத்துவிடக்கூடாது.

**நா. நவராஜ்**
கொழும்புத்துறை.

□ ❋ □


# குதிரையைக் காத்த பரன் மஞ்சூசன்

BARON MONCHAUSEN
SAVES HIS HORSE

ஜேர்மனியக் கதை

எழுத்துருவாக்கம்: **சு. சிவராசா**

(ஆங்கிலத்திலிருந்து தமிழில்)



**ப**ரன் மஞ்சூசன் என்பவன் ஜேர்மனிய நாட்டிலுள்ள ஹனோர்வர் (Hanover) நகரத்தில் வாழ்ந்து வந்தான், அவன் சுவையாகக் கதை களைப் புனைந்து கூறுவதில் வல்லவன் தான் சொல்லுகின்ற கதைகள் உண்மையானவை என்று கேட்பவர்களை நம்பச்செய்துவிடுவான். உண்மையில் அவை புனையப்பட்ட புழுகுக் கதைகளேயாகும். அவன் ஒருசமயம் ருஷ்ய நாட்டிற்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பி வந்தான். அங்கே தனக்கு நடந்ததாக அவன் ஒரு கதை சொன்னான்:

நான் எனது குதிரையில் சவாரிசெய்து ருஷ்யாவிற்குப் போனேன். நான் போன சமயம் கடுமையான பனிக்காலமாக இருந்தது. நிலம் முழுவதும் பனிக்கட்டியால் எங்கும் மூடப்பட்டுக் கிடந்தது. மரங்களோ அல்லது குதிரைகளோ அல்லது வேறு எந்தப் பொருட்களையோ அங்கே காணமுடியவில்லை. இந்த நாடு முழுவதுமே பனிக்கட்டிக்குள் புதைந்துவிட்டதோ என்று நினைத்தேன். அங்கே வீசிய பனிக்காற்றை என்னால் தாங்கமுடியவில்லை. அவ்வளவிற்கு குளிர் மிக மோசமாக இருந்தது.

பொழுது சரியும்வரை குதிரையிலேயே அலைந்து திரிந்தேன். இராப்பொழுதைக் கழிப் பதற்கு ஒரு இடமும் எனக்கு அகப்படவில்லை. நான் எல்லா இடமும் என் பார்வையைச் சுழல விட்டேன். விளக்கு வெளிச்சத்தின் சிறு மினுக் கொளியைக் கூட அங்கே காணமுடியவில்லை.

அப்பொழுது எனக்கு மிக அருகில் ஒரு மரத்தண்டு பனிக்கட்டி படர்ந்த நிலத்திற்கு வெளியே நீட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. அதன் உயரம் இரண்டடி அளவு இருக்கலாம். அந்த மரத்தண்டிற்குப் பக்கத்தில் அன்றிரவைப் போக்கலாம் எனத் தீர்மானித்தேன். நான் குதிரையில் இருந்து இறங்கினேன். அதன் முதுகில் இருந்த சேணத்தை அவிழ்த்து வைத் தேன். பிறகு, அதை அந்த மரத்தண்டில் கட்டினேன்.

பின்பு நான் பனிபடர்ந்த தரையில் படுத்துக் கொண்டேன். எனது நீண்ட பிரயாணத்தால் உடல் அலுத்துக் களைத்துப்போயிருந்தது. விரைவிலேயே அயர்ந்து தூங்கிவிட்டேன்.

நான் கண் விழித்தபோது எங்கும் வெளிச் சம் பரவியிருந்தது. இப்போது நான் இருந்த இடத்தைச் சுற்றிக் கண்ட காட்சிகள் எனக்குப் பெரிய ஆச்சரியத்தைத் தந்தன. எனது குழப்பம் ஓரளவு தெளிந்த பின்னர், நான் ஒரு பெரிய நகரத்தின் மத்தியில் இருப்பதை அறியமுடிந்தது. நான் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்திற்குப் பக்கத் தில் இப்போது இருந்தேன். ஆகவே இரவு அதே இடத்தில்தான் படுத்து உறங்கி இருக்கிறேன்.

இப்போது எனக்கு ஒரு பிரச்சனை ஏற்பட் டது. எனது குதிரையைப் பக்கத்திலிருந்த மரத் தண்டில் கட்டிவைத்திருந்தேன். ஆனால் என்ன ஆச்சரியம்! தேவாலயச் சுற்றுப் பிரகாரத்தில் அந்தக் குதிரையையோ அல்லது அது கட்டப் பட்ட மரத்தண்டையோ காணவில்லை. நான் குதிரையை எண்ணிக் குழம்பிக்கொண்டிருந்த வேளையில் எனது தலைக்கு மேலே வேதனை கலந்த மெல்லிய குரலில் குதிரை கனைக்கும் சத்தம் கேட்டது.

நான் தலையை நிமிர்த்திப் பார்த்தேன். நான் கண்ட அந்தக் காட்சியால் அதிர்ந்து போனேன். அந்தத் தேவாலயத்தின் உச்சியிலிருந்த சிலுவை மரத்தில் குதிரை தொங்கிக் கொண்டிருந்தது.

இப்போது எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. நேற்று மாலையில் நான் கண்டது பனிக்கட்டிக்குள் முற்றாக மூழ்கிக்கிடந்த தேவாலயத்தின் உச்சியில் பொருத்தப்பட்ட சிலுவை மரமே ஆகும். குதிரையை அந்த மரத்தில்தான் கட்டியிருந்தேன்.

இரவு முழுவதும் அங்கே வெப்பமான காற்று வீசியிருக்க வேண்டும். அதனால் தேவாலயத்தை மூடிக்கிடந்த பனிப்படலம் முற்றாக உருகி மறைந்து போய்விட்டது. சிலுவை மரத்தில் கட்டப்பட்ட குதிரை மேலே தொங்கிக்கொண்டிருக்கிறது. நான் எனது பொருட்கள் அடங்கிய பொதியுடனும் குதிரையின் சேணத்துடனும் தரைக்கு வந்துவிட்டேன்.

எனது குதிரையைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. நான் உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். நான் ஒரு சிறந்த துப்பாக்கி சுடும் வீரன் என்பது உலகறிந்த விசயம். கோர்ட்டுப் பைக்குள் கையைவிட்டு எனது துப்பாக்கியை உருவி எடுத்தேன். குதிரையை மரத்தோடு பிணைத்திருந்த கடிவாளக் கயிற்றைக் குறிவைத்துச் சுட்டேன். கடிவாளம் அறுந்து போகக் குதிரை நிலத்தில் வந்து விழுந்தது. தெய்வாதீனமாகக் குதிரைக்கு ஒரு சிறிய காயம் கூட ஏற்படவில்லை. அதன் முதுகை ஆதரவாகத் தட்டிக்கொடுத்தேன். சேணத்தைப் பூட்டி கடிவாளத்தைச் சரிசெய்தேன். மீண்டும் எனது குதிரையில் ஏறி எனது ருஷ்யப் பிரயாணத்தை மகிழ்ச்சியாக முடித்துக்கொண்டு ஜேர்மனிக்குத் திரும்பினேன். □

# தனித்தன்மை

- ரிஷிஓசோ

> **" நீங்களும் இதைப்போல செயல்படவேண்டும். சாதாரணமாகச் செயல்படுங்கள். ஆனால், உங்களுடைய வாழ்க்கையில் ஒரு விழிப்புணர்வுத் தன்மையைக் கொண்டு வாருங்கள். கடவுள் தன்மையை உங்கள் சாதாரண வாழ்க்கையில் கொண்டுவாருங்கள்."**

பொக்கோஜூ என்ற ஞானியை, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களது சமயக் கோட்பாடுகள் என்ன?" என்று சிலர் கேட்டார்கள்.

அதற்கு அவர், "நான் மிகச் சாதாரண வாழ்க்கையில் வாழ்கிறேன். இதுதான் என் கொள்கை. எனக்குப் பசி எடுத்தால் புசிக்கிறேன், தூக்கம் வந்தால் தூங்குகிறேன், அவ்வளவுதான்!" என்றார்.

கேள்வி கேட்டவர் மிகவும் குழப்பம் அடைந்து, "ஆனால் நீங்கள் செய்வதில் நான் எதையும் தனித்தன்மையாகப் பார்க்கமுடியவில்லையே!" என்றார்.

"ஆமாம், அதுதான் முக்கியம். அதில் எந்தவித தனித்தன்மையே கிடையாது" என்றார் பொக்கோஜூ.

கேள்வி கேட்டவர் மறுபடியும், "நீங்கள் செய்வதைத்தான் எல்லோரும் செய்துகொண்டிருக்கிறார்கள். பசி எடுத்தால் புசிக்கிறார்கள், தூக்கம் வந்தால் தூங்குகிறார்கள்" என்றார்.

பொக்கோஜூ சிரித்துக்கொண்டு, "அப்படி இல்லை. அவர்கள் செய்வதிலும், நான் செய்வதிலும் ஒரு வேறுபாடு உண்டு.

நீங்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது உங்கள் மனம் ஆயிரக்கணக்கான எண்ணங்களில் அசைபோட்டுக்கொண்டிருக்கும். நீங்கள் கனவு காண்பீர்கள், கற்பனை செய்வீர்கள். வேறு எதையோ நினைத்துக்கொண்டு இருப்பீர்கள். நீங்கள் சாப்பிடும் பொழுது, அங்கே நீங்கள் உண்மையில் இல்லவே இல்லை.

ஆனால், நான் சாப்பிடும் பொழுது நான் சாப்பிடமட்டும்தான் செய்கிறேன். வேறு எந்தச் சிந்தனையும் எனக்குக் கிடையாது.

அதேபோல, நீங்கள் தூங்கச்செல்லும் பொழுது ஆயிரம் கற்பனைகள், கனவுகள், எதிர்பார்ப்புகள் என்று பல சிந்தனையில் மூழ்குகிறீர்கள்.

ஆனால் நான் தூங்குவதானால் தூங்க மட்டும் செய்கிறேன். வேறு எதுவும் கிடையாது. வேறு எந்தச் சிந்தனைக்கும் இடம் கிடையாது. ஏன், பொக்கோஜூ என்பவனே அங்கு கிடையாது. சாப்பிடுவதானால் அங்கு சாப்பிடுதல் மட்டும்தான் இருக்கும். அதேபோல் நடப்பதானால் நடப்பது மட்டும்தான் இருக்கும். அங்கு பொக்கோஜூ இல்லை. நடத்தல், நடப்பது மட்டும்தான்" என்றார்.

# வாசகர் நெஞ்சம்...

சுந்தரனே வாழிய நீ!

சிரித்திரன் இல்லையென்று
சினந்திருந்த மக்களுக்கு
சுந்தரத் தமிழிசைக்க வந்த
சுந்தரனே வாழிய நீ!

பொன்னான தமிழையிங்கு
பொலிவுடனே தந்திடவே
கண்ணான சுந்தரனே
காலமெல்லாம் வாழிய நீ!

தட்டிடும் தடைகளையே
முட்டியிங்கு மோதியே நீ
பண்போடு முன்னேறி
பல்லாண்டு வாழிய நீ!

வற்றாத தமிழ் தந்த
வடிவான சுந்தரனே
பற்றோடு பாடுகிறேன்
பலகாலம் வாழிய நீ!

கைதடியூர்: **T. லவனி**

□ □ □

'சுந்தரன்' இலக்கிய இதழ் வாசகர்களில் யானும் ஒருவன். அவன் தரும் சுவைதரு அம்சங்கள் பார்த்து அகம்மகிழ்வேன். கட்டுரைகள், கவிதைகள், கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் மிகவும் சிறப்பாக உள்ளன. மனமுற்றத்தில் வரும் கவிதை வரிகள் சிந்திக்க வைப்பன. மிகப் பாராட்டுக்குரியது. சுந்தரன் மென்மேலும் வாழ வளர வேண்டுதல் வேண்டாமை இலானை வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
**சுந்தர - நேசன்**
பண்ணாகம் - சுழிபுரம்.

□ □ □

ஆசிரியர், சுந்தரன்.

''சுந்தரன்'' இதழ் 4 கண்டேன். அட்டைப்படம் அருமையிலும் அருமை. நமது சமூகத்தில் புரையோடிப்போயுள்ள அவலத்தைத் தெளிவுபடுத்தியது. அதற்குச் சிகரம் வைத்தாற்போல் செ. பவானியின் ''கண்களைத் திறவாயோ...'' சிறுகதை அமைந்திருந்தது.

இப்படியான தீய கலாசாரங்களிலிருந்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்குச் சுந்தரன் பாடுபடவேண்டும்.

**S. மணிவண்ணன்**
பருத்தித்துறை.

□ □ □

ஐயா!

சுந்தரன் இதழ் 4 கண்டேன். மனமகிழ்ச்சி கொண்டேன். பேரெழுத்தாளர்களின் வழிகாட்டலில் நாளைய உலகில் சிறந்த இலக்கிய சமூக ஏடாக நிமிர்ந்து நிற்கப்போகும் சுந்தரனை மனமுவந்து பாராட்டுவதில் தவறேதுமில்லையே.

மற்றும் சுந்தரன் இதழில் துன்பமும் மிடிமையும் நிறைந்த கதைகளை வெளியிடாமல் இன்பம் தரும் கதைகளை வெளியிட்டால் அவன் மெருகேறி பீடுநடைபோட்டுச் செல்வான் என்பதில் ஐயமில்லை.

''சாய் இல்லம்''
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

அன்புடன்
தனுஜா தபேந்திரன்

---

'ஒவ்(F)பீஸ்' நேரம் ஊரரட்டை
'ஒவ்(F)' செய்த பின்னர் 'ஓவர்ரைம்'

வே. இளையகுட்டி

---

ஆசிரியர், சுந்தரன்

சுந்தரன் நான்காம் இதழ் கண்டேன் கொட்டில் சிறுகதையில் காலத்தின் கோலத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தஞ்சம் கொடுத்த கொட்டில் இறுதியில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. பாவம் அப்புவின் மனம் என்ன பாடுபட்டிருக்கும். கதை ஆசிரியருக்கு எனது பாராட்டுகள்.

செல்விகள்
நளினி, சுதர்சினி, சுகிர்தா,
துவாரகா, ஞானமுத்து.

கைதடி மேற்கு.

□ □ □

சுந்தரன் நான்காம் இதழ் கண்டேன். என் சகோதரர்களும் சுந்தரனை ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். சுந்தரனில் இம்முறை வெளியான ''கண்களைத் திறவாயோ'' சிறுகதை நடைமுறையில் உண்மைச் சம்பவம். இன்னும் இப்படியான சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் வெளிவரவேண்டும் என்று விரும்புகின்றேன். 'புதையுண்டவள்'. 'உயிர் விலங்கு' போன்ற கவிதைகள் மனதைக் கிறங்கவைத்தன.

க. சத்தியமாலா

சுந்தரன்,

இதழ் நான்கு படித்தேன்,
இதயத்தால் பேசுகின்றேன்.

மனமுற்றம் எங்கும் ரோஜாச் செடிகள் சிரித்துக்கொண்டே குத்துகின்றன. தமிழனின் மனதை முற்றத்தில் எடுத்து வீசியிருக்கிறீர்கள். அணுகுண்டு வெடித்து ஓய்ந்தாலும் கதிர்வீச்சு தொடர்ந்துகொண்டே இருப்பதைப்போல என் மனம் முழுவதும் உங்களது வரிகள் வலம்வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஆசிரியர் தலையங்கத்தில் ஆவேச வார்த்தைகளை ஓரளவு தவிர்த்து இடக்காக, கிண்டலாக விடயங்களைக் குத்திக்காட்டி விட்டுவிடுதல் இன்னும் அதிக பலனை அளிக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சிறுகதைகள் எல்லாமே நன்றாக இருந்தன. குறிப்பாகக் 'கொட்டில்' அற்புதம். தொலைத் தொடர்பு சாதனங்களின் ராட்சத வலையில் அகப்பட்டுக் கண்டதே காட்சி என்ற நவநாகரிகப் பாணியினைப் பின்பற்றும் இன்றைய இளைய சமுதாயத்திற்கும் பண்பாடு பேணுபவர்களாய் ஆன்மாவின்சிலிர்ப்புகளேவாழ்க்கை எனக் கருதுபவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் முதியவர்களுக்கும் இடையேயான பண்பாட்டுத் தேக்கத்தினை, தலைமுறை இடைவெளியினை அற்புதமாகச் சித்திரிக்கின்றார் ஆசிரியர்.

'டாவின்சின் வாரிசுகள்' இரசிக்கக்கூடியதாக இருந்தது. எட்டப்பனும், கட்டப்பொம்மனும் ஒரே இனத்தில் என்பதுபோல நன்மையும் தீமையும் ஒருங்கே பொதிந்த நவீன விஞ்ஞானத்தின் இரண்டு பக்கங்களையும் முதலிரண்டு பக்கங்களில் அமைந்திருந்த த. ஜெயசீலன், சண்முகபாரதியின் கவிதைகள் புலப்படுத்தியிருந்தன. எட்டுமூலை மூலம் எமக்கு எட்டாத மூலை(ளை)களை மகாகவியின் தேரும் திங்களும் பாணியில் எமக்குக் காட்டியிருக்கிறார். த. ஜெயசீலன் நாலுமூலையுள்ள மாயப் பெட்டியினால் எமது நாளும் மூளையும் நரம்பு மண்டலமும் நாலுமூலைக்குள்ளே நடைப்பிணமாகும் சேதியைப் 'பாவங்கள்' மூலம் படைத்துள்ளார் சண்முகபாரதி. ''புதையுண்டவள் நான்'' என்ற சஞ்சயனின் கவிதையும் சற்று வித்தியாசமான முறையில் எடுத்தாழப்பட்டிருக்கிறது.

சுந்தரனின் பணி தொடரப் பாராட்டுக்கள்.

கந்தர்மடம், ச. முகுந்தன்
யாழ்ப்பாணம்.

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு!

சுந்தரனின் நான்காம் இதழைப் படித்ததும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

முதற்பக்கத்திலுள்ள த. ஜெயசீலனின் 'எங்களது பட்டங்கள் கவிதையில் கிணற்றுத் தவளைகளாக இருந்த, இருக்கின்ற, இருக்கப் போகின்ற எம் எதிர்காலச் சந்ததியினைப்பற்றிய அவரின் வாட்டத்தை வடிவாக வடித்திருக்கின்றார்.

மேலும் 'டாவின்சின் வாரிசுகள்' என்ற சிறிகதையில் அதன் ஆசிரியர் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்கு இணங்க தற்கால விடயங்களை (உ-ம்: அணுகுண்டு வெடித்ததைப் பார்த்த பாகிஸ்தான் போல) உபமானங்களாகச் சொல்லியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

மொத்தத்தில் சுந்தரன் மிகுந்த சுந்தரமாகவே வெளிவந்திருப்பதையிட்டு நான் மிகுந்த மகிழ்வடைகின்றேன்.

நா. நவராஜ்
கொழும்புத்துறை.

☐ ☐ ☐

ஐயா வணக்கம்!

மலர்ந்த 4 'சுந்தரன்' இதழ்களும் அருமையாக உள்ளன. ஒவ்வொரு புத்திஜீவிகளும் சிறந்த முறையில் தத்தம் பங்களிப்பை நல்கி வருகின்றார்கள்; பாராட்டுக்கள். சிறந்த கலை, இலக்கிய, சமூக ஏடாக சுந்தரன் தொடர்ந்தும் வெளிவரட்டும். எல்லா அம்சங்களுமே மனதைக் கொள்ளைகொண்டு வருகின்றன. பல்வேறு வகைப்பட்ட போட்டிகளையும் வைத்து அசத்திவிடுகிறீர்கள். உங்களைப் பெரிதும் மெச்சுகிறேன். தொடர்ந்தும் வெற்றிப் பாதையில் முன்னேறுங்கள். என் நல்வாழ்த்துக்கள் சுந்தரன் ஆசிரியருக்கு.

அபிமான வாசக நேயர்
கே. இராஜகோபால்

☐ ☐ ☐

---

**ஆசியர்:-** ரவி, உனக்குத் தெரிஞ்ச ஐந்து பால்களுக்குள் சிலவற்றைச் சொல்லு.

**ரவி:-** எங்டை வகுப்பிலை தனபால் கோபால் எண்டு ரெண்டு பொடியள் தான் சேர் இருக்கிறாங்கள்.

**ஆசிரியர்:-** ? ? ?

சு. சிவராசா


# சொல்லாடற் போட்டி - 1

வாசகர்களின் அன்பான வேண்டுதலுக்கிணங்க 'சொல்லாடற் போட்டி' ஒன்றினை ஆரம்பித்துள்ளோம். இம்முறை இப்போட்டியினை ஒரு பரீட் சார்த்தமாக தந்துள்ளோம். உங்களது திறமையைப் பொறுத்து இவற்றில் மாற்றங்கள் செய்ய உத்தேசித்துள்ளோம்.

1ம் பரிசு 75 ரூபா

2ம் பரிசு 50 ரூபா

3ம் பரிசு 25 ரூபா




சொல்லாடற் போட்டி இல. 1
சுந்தரன்

பெயர் ..............................................

விலாசம் ..............................................

..............................................

சொல்லாடற் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது இடதுபக்க மேல் மூலையில் "சுந்தரன் சொல்லாடற் போட்டி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேலுள்ள படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்து கத்தரித்து கடித உறையுள் வைத்து அனுப்ப வேண்டும்.

இடமிருந்து வலம்

1. யாகங்களின் தலைவனான இந்திரன். 2. தகுதிப்பாடு 7. மண்மேடு, மேடு 8. அபிப் பிராயம், பாடற்பொருள் குறித்த சொல். 9. திறமைசாலி, வல்லமை பொருந்தியவன். 10. இந்த இரு எழுத்துக்களுடன் 'தாரன்' என்ற மூன்று எழுத்துக்களைச் சேர்த்தால் 'மனைவியை இழந்தவன்' என்ற பொருள் தரும் சொல் உண்டாகும். 11. இன்று இப்பிரதேசத் தில் போர் உக்கிரமாக நடக்கிறது. 12. அழ கைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். 13 ஊழி என்னும் ஒரு காலப்பிரிவு. புராணங்கள் நான்கு ஊழிகளாகப் பிரித்துக் கூறும். 15. குற்றம். 16. மிகுவேகம். 18. உள்ளத்தில் ஏற்படும் அந்தர உணர்ச்சி. 19. இராமபிரானால் வதைக்கப்பட்ட இயக்கி. 20. குதிரை, இரக் கப்படு என்னும் பொருளையும் தரும்.

மேலிருந்து கீழ்

1. மூளைத்திறன். 2. சமுத்திரம். 3. சிலம்பு. 4. மரம். 5. 'அப்பமொடு அவல்பொரி' எனத்தொடரும் திருப்புகழுக்கு முன்பு வரும் சொற்றொடரின் ஒரு பகுதி. 6. கீழிருந்து மேலாக எழுத்துக்களை மாற்றினால் நவீனம் எனப் பொருள் தரும் சொல். 8. முதன்முதல் ஒருவர் நிகழ்த்தும் உரை அல்லது பேச்சை இவ்வாறும் அழைப்பர். 12. 28 நட்சத்திரங் களில் ஒன்று. 14. ஒருவகைப் பறவை. 15. கோவலனின் காதற் கணிகை. 16. கீழ் மேலாக மாற்றினால் பூமி என்ற பொருள் தரும் சொல். 19. 'விதம்' என்ற பொருள் தரும் சொல்.

---

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

# 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி-5

## பரிசு ரூபா 200/-

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையெழுதிப் பரிசினை வெல்லுங்கள். உங்கள் விடைகளை ஒரு தாளிலே நிரப்பி 'சுந்தரன்' 252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 01-10-1998க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். உங்கள் கடித உறையின் மேல்பகுதியில் 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி - 5 எனக் குறிப்பிடுக. ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து, ஒழுங்கு, விடையளிக்கப்பட்டமுறை போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. 1998 உலகக்கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டி எங்கு நடந்தது?
2. கார் விபத்தில் மரணமடைந்து, மேற்கு உலகினைச் சோகத்தில் ஆழ்த்திய பெண்மணி யார்?
3. உலகின் மிகப்பெரிய தீவு எது?
4. வியட்னாம் எந்தக் கண்டத்தைச் சேர்ந்த நாடு?
5. ஆப்கானிஸ்தானின் தலைநகர் யாது?
6. நெடுந்தீவுக்கு ஒல்லாந்தர் இட்ட பெயர் யாது?
7. யாழ்ப்பாண வைபவமாலை நூலின் ஆசிரியர் யார்?
8. இலங்கையின் தென் அந்தம் யாது?
9. மிகப் பரந்ததோர் மணல்வெளி யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ளது. அது யாது?
10. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகம் ஒன்று குடாநாட்டுக்கு வெளியேயுள்ளது. அது எது?

ஆசிரியர்,

சுந்தரன்,
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இவ்விலாசத்தினைக் கத்தரித்து அனுப்ப மறவாதீர்கள்.


பலதரமான சிரிகதைகள் நமக்குக் கிடைத்தன. இருந்தாலும் நடுவர்கள் தீர்ப்பின்படி, சி. கதிர்காமநாதன் அவர்களே மீண்டும் பரிசினைப் பெறுகிறார். மீண்டும் ஒருவருக்கே பரிசினைக் கொடுக்கவேண்டும் என்று நாம் நினைக்கவில்லை. அவர் திறமை அதை அவருக்கு வழங்கவைத்துவிட்டது!

அவருக்கு சுந்தரனின் பாராட்டும் பரிசும்.

# துடுப்பாட்டத்தின் கதை

தில்லைநாதன் கோபிநாத்
யாழ். இந்துக்கல்லூரி

சனத் ஜெயசூரிய, சச்சின் ரென்டுல்கர் போன்ற பெயர்களை அறியாத மாண வரே இல்லை என்னுமளவிற்குப் பிரபல மடைந்துள்ள CRICKET என்ற துடுப்பாட்டத் தின் கதை சுவையானது. இதனை இராஜ விளையாட்டு (The King of the Games) என்கிறார்கள்! எனினும் இவ் ஆட்டத்தை 'முட்டாள்களின் விளையாட்டு' என்று கூறு வோரும் உள்ளனர்!



சுமார் 500 ஆண்டுகளின் முன்னர் இங்கிலாந் திலே இரு வகையான ஆட்டங்கள் விளையாடப் பட்டன. முதல்வகை ஆட்டத்தில் ஒரு தோற் பந்து வீசப்பட ஆட்டக்காரர் அதனைத் தடி யொன்றால் அடித்தார். பந்துத் தடுப்பாளர் களும் இருந்தார்கள். ஆனால் பந்து வீசுபவருக் கான இலக்கு (Wicket) பயன்படுத்தப்பட வில்லை.

மறுவகை ஆட்டத்தில் ஒரு Stool இலக்கா யிருக்கப் பந்தினை ஆட்டக்காரர் வெறுங் கைகளாற் தடுத்து அடித்தார். ஒருமுறை தடுத் தால் ஒரு எண்ணிக்கை கிடைத்தது. பந்து Stoolஇனை மோதினாலோ அல்லது கையினால் அடிக்கப்பட்ட பந்தைத் தடுப்பாளர் ஒருவர் பிடித்தாலோ (Catch) ஆட்டக்காரர் ஆட்ட மிழந்தார்!

காலப்போக்கில் இவ்வகை ஆட்டத்திலும் தடுத்தாடுவதற்குத் தடிகளைப் பயன்படுத்தும் முறை அறிமுகமானது. இருவகை ஆட்டங்களும் இணைந்து Cricket உருவானது. இலக்காக 'Stool'ற்குப் பதிலாகத் தடிகள் நடப்பட்டன. இரண்டு தடிகள் நடப்பட்டு அவற்றின் மேல் மூன்றாவது தடி வைக்கப்பட்டிருந்தது. தடுத் தாடுவதற்குத் தடிகட்குப் பதிலாகச் சற்று அகலமான துடுப்புக்கள் (Bat) அறிமுகமாகின.

பந்தினை அடித்துவிட்டு மைதானத்தின் இரண்டு இலக்குகட்கிடையில் ஓடுவதன் மூலம் எண்ணிக்கையைப் பெறும் முறையும் அறிமுக மானது. நடப்பட்ட இரு இலக்குத் தடிகளுக் கிடையில் ஒரு குழி வெட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஓட்ட முடிவிலும் துடுப்பாளர் துடுப் பினைக் குழியுள் வைத்தார். அதன் முன் பந்து குழியுள் வைக்கப்பட்டால் அவர் ரன் அவுட் ஆனார்.

ஆனால் இம்முறையாலே பல விக்கெட் காப்பாளர்கள் தங்கள் கைகளைக் காயப்படுத் திக் கொண்டார்கள். அது தவிர பந்து வீசும் போது பந்து தடியை வீழ்த்தாமலேயே இடை வெளியூடாகச் செல்லக்கூடியதாக இருந்தது. ஆதலால் இரு தடிகளுக்குப் பதிலாக மூன்று தடிகள் நடப்பட்டன. நடுவர் வேறொரு தடி யினைக் கையில் வைத்திருந்தார். ஒவ்வொரு ஓட்ட முடிவிலும் துடுப்பினால் அத்தடியினைத் தொடவேண்டியிருந்தது. ஆனால் இம்முறை யிலும் பலர் காயப்பட்டனர்.

இதனால் விக்கெட்டுக்கு முன் Crease வரை யும் முறை அறிமுகமானது. இம்முறையே இப் போதும் நடைமுறையிலுள்ளது.

ஆரம்பத்தில் பந்தாளர்கள் பலவிதங்களிற் பந்து வீசினர். ஒரு இளம்பெண்தான் கையினைத் தலைக்கு மேலாகச் சுழற்றிப் பந்துவீசும் முறை யினை அறிமுகம் செய்தார். இதன் பின்னர் தான் பந்துவீசும் முறை, துடுப்பின் அகலம், ஒரு அணியில் இருக்கவேண்டியோர் எண்ணிக்கை போன்றவை பற்றிய விதிகள் அறிமுகமாயின.

பலவித மாற்றங்களுக்கும் முன்னேற்றங் களுக்கும் துடுப்பாட்டம் உள்ளான பின்னர் 1877ஆம் ஆண்டிலிருந்துதான் Test ஆட்டங்கள் ஆடப்படுகின்றன. இங்கிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் முதல் ரெஸ்ற் ஆட்டங்களை ஆடின. இப்போது இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை, சிம்பாவே ஆகிய நாடுகள், மேற்கிந்தியத் தீவுகள் அணி என்பனவும் ரெஸ்ற் ஆட்டங்களிற் கலந்து கொள்கின்றன.

உலகின் முதல் ரெஸ்ற் ஆட்டம் 1877ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அவுஸ்ரேலியா வின் மெல்பேர்ண் நகரில் தொடங்கியது. இவ்

ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி இங்கிலாந்து அணியை 54 ஓட்டங்களால் வென்றது. முதல் இனிங்சில் 165 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்ற அவுஸ்ரேலிய வீரர் Charles Bannerman ரெஸ்ற் ஆட்ட வரலாற்றில் சதம் அடித்த முதல் வீரரானார்.

இன்று உலகத் துடுப்பாட்ட அணிகளுள் முக்கியமானதொன்றாக இலங்கை அணி திகழ்கிறது. இலங்கைக்கு ரெஸ்ற் ஆடும் உரிமை 1982 யூலை இருபத்தோராம் திகதியில் கிடைத்தது. அவ் ஆண்டில் தன் முதல் ரெஸ்ற் ஆட்டத்தை இங்கிலாந்திற்கு எதிராக ஆடிய இலங்கை அணிக்கு பந்துல வர்ணபுர தலைமை தாங்கினார். அவ் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

இலங்கை அணிக்கு முதல் ரெஸ்ற் வெற்றி 1986 செப்ரெம்பரில் இந்தியாவுக்கு எதிராகக் கிடைத்தது. இலங்கைக்கு அது 14ஆவது ரெஸ்ற் போட்டி. சரவணமுத்து விளையாட்டரங்கில் இலங்கை 149 ஓட்டங்களால் வெற்றிபெற்றது

ரெஸ்ற் ஆட்டங்களே பாரம்பரியமாக இருப்பினும் தற்காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் (50 Overs) கொண்ட ஒருநாள் சர்வதேச ஆட்டங்களே ( One day Internationals ) இரசிகர்கள் மத்தியில் அதிக வரவேற்புப் பெறுகின்றன.

ஒருநாள் ஆட்டங்களுக்கு ஏறத்தாழ கால் நூற்றாண்டு கால வரலாறு மட்டுமே உண்டு. 1970 - 1971 காலப்பகுதியில் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ரெஸ்ற் ஆட்டங்களுக்கு மழை பெரும் இடையூறாக இருந்தது. ஆதலால் இரசிகர்களின் ஆவலைத் தீர்ப்பதற்காகவே ஒருநாள் ஆட்டங்களை ஆடினர். இவ்வகை ஆட்டத்தில் பரபரப்பும் விறுவிறுப்பும் அதிகமாக உள்ளதால் இரசிகர் மத்தியில் வரவேற்புக் கிடைத்தது, பிற நாடுகளும் ஆடத் தொடங்கின.

ஆரம்பத்தில் 60 ஓவர்களைக் கொண்டதாக அமைந்திருந்த ஒருநாள் போட்டிகள் இப்போது 50 ஓவர்களைக் கொண்டமைகின்றன.

உலகக் கிண்ணப் போட்டிகள் 1975இல் இங்கிலாந்தில் நடைபெறத் தொடங்கின. பின்னர் 1979, 1983, 1987, 1992, 1996 ஆகிய ஆண்டுகளிலும் உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்றன. முதலிரு தடவைகளில் மேற்கிந்தியத் தீவுகளும் பின்னர் முறையே இந்தியா, அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளும் உலகக்கிண்ணத்தை வென்றன.

அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகள் 1999 மே - யூன் காலப்பகுதியில் இங்கிலாந்தில் நடைபெற உள்ளன.

வேகம் நிறைந்ததாக இருப்பதால் ஒருநாள் ஆட்டங்கள் அதிகம் விரும்பப்படுகின்ற போதிலும் ரெஸ்ற் ஆட்டங்களில் ஆடுவதும் வெல்வதுமே இன்றும் பெருமைமிக்கதாகக் கருதப் படுகின்றது.

---

பாபு:- காணமல் போன உனது பாடசாலை ''புத்தகப்பை'' எங்கே இருந்தது?

கோபு:- மினிசினிமாக் கதிரையின் கீழே இருந்தது!

துரைசீலன் – சுரவெட்டி

---

# மழை



கூலியின்றி வந்த இவள்
குடும்பத்து வேலைக்காரி
தாலி பெற்றதாலே நல்ல
தகுதியுள்ள வேலைக்காரி
வேளை தனிலெழுந்து
விறகடுப்பை ஊதி
காலை முதல் மாலைவரை
களைப்பதனை போக்கி
விதி வசத்தால் சேர்ந்தவனின்
விலங்கதனில் இணைந்து
கதியெனக்கு குடும்பமென
கடக்க வழி கெட்டு
அடக்கி யொடுக்கப்பட்டு
ஆளுமைகள் பறிக்கப்பட்டு
பூவோடு பொட்டும்
பொலிந்த நல்தோற்றம்
பாரோர்க்கு காட்டும் வெறும்
பகட்டுப் பகல் வேஷம்
பாரதி பாடியென்ன? பெண்ணே
பாராண்ட போதுமென்ன
நீ'ரதி'யானால் என்ன
நிகரிலாத் தகைமையென்ன
''சாரதி போல்வான்'' இட்ட
சட்டத்துள் அடங்கி வெந்து
பேரது விளங்கப் பெற்ற
பிள்ளைக்காய் வாழ்வைத் தந்து
வாடிடும் உன்னை எண்ணி
வடித்திடும் வானம் கண்ணீர்.

- எஸ். சக்தி

# சின்னச் சைக்கிள்

செ. பவானி

இந்தக் காடுமேடெல்லாம் திரிஞ்சு களைச்சு ஊருக்குப் போய்ச் சேரவேணும் எண்டு ஒரு மாதிரி வந்து சேந்தாச்சு.

வீடுமட்டும் மிஞ்சிப் பொருள் பண்டமெல்லாம் போன கதை பழைய கதை.

எப்படியோ...! அந்த மனுசன் கத்தி உழைச்சுக்கொண்டாறதில நானும் என்ர குஞ்சுகளும் ஒருமாதிரிக் காலங்கழிச்சுக் கொண்டு சீவியம் போகுது.

இந்தக் கோழியளுமில்லாட்டி எங்கட பாடு பெரும் பாடுதான்

ம்...! அந்தா மூத்தவன் வந்திட்டான்... பாவம், காலமை ஆறு மணிக்குப் போனபிள்ள இப்ப வீட்டவர பின்னேரம் ஆறுமணியாச்சுது. விடிய ஒரு ரியூசன் பிறகு பள்ளிக்கூடம். அது முடிய பிறகும் ரியூசன் எண்டு போகுது... 'ஏனிப்பிடி பிள்ளையள ரியூசனுக்கு விடுகிறியள்' எண்டு பள்ளிக்கூடத்தில வாத்திமார் கேக்கினமாம்.

எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்ல... பள்ளிக்கூடத்தில எப்பபாத்தாலும் கொண்டாட்டம், முப்பது நாளும் போட்டியள், விழாக்கள் எண்டு காலம்போகச் சோதினை வந்திடும். சிலபஸ்சோ என்னவோ ஒரு பஸ்சைப் பிடிக்க வேணுமெண்டு, வாத்திமாரும் ஓட, பிள்ளையளும் ஓட, இது எங்கபோய் முடியப்போகுதோ?

''தம்பி குகா கைகாலைக் கழுவிப்போட்டுச் சாப்பிட வா மோன.''

நான் சாப்பாட்டை எடுத்து வைக்க, குனிந்தகுனியில சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் ஓடுறான்.

கிணற்றடியில கமலாவும், சுகியும் சண்டை பிடிக்கிற சத்தம் கேக்குது. இதுகள் ரெண்டும் எப்பவும் இப்பிடித்தான். சேர்ந்து தோய்க்கப் போறமெண்டு போனதுகள் இப்ப மல்லுக்கட்டுதுகள். இதுகளை விட்டதுக்கு நானே வேலையோட வேலையாச் செய்திருக்கலாம்.

என்ர பெட்டையள் ரெண்டும் வலு கெட்டிக்காரியள். தகப்பனைப் போலதான். அந்த வகுப்பு, இந்த வகுப்பு எண்டு ஓடியோடிப் படிக்கிறதைப் பாத்தா எனக்குப் பெருமை தான். நான்தான் படிக்காதவள் எண்டாப் போல பிள்ளையள அப்பிடி வளக்கப்படாது. என்ர அப்பு எனக்கு ஒரு வாத்திப்பொடியனச் செய்து வைக்கவேணும் எண்டு தேடியலைஞ்சதை நினைச்சா இப்பவும் சிரிப்பாக்கிடக்குது. அந்த நாளையில வாத்தியாரெண்டால், வேற பெருமைக்கு இடமேயில்லை.

என்ர வடிவுக்கு எத்தின அரசாங்க உத்தியோகத்தர் தேடி வலியவந்தவை. அப்பு அசையனெண்டிட்டார். முடிச்சா வாத்திதான் என்ர மகளுக்கு எண்டு தேடி எடுத்தும் போட்டார்.

இந்த நாளையில வாத்திமாரை யார் மதிக்கினம்? என்ர பெட்டையள் பள்ளிக்கூடத்தில உள்ள வாத்திமாரின்ர பட்டங்களைச் சொல்லுவாளவை... காவோலை, யானைத்தந்தம், சிடுமூஞ்சி, கவசவாகனம். மற்ஸ் பாடம் படிப்பிக்கிற ரீச்சர் பிள்ளையளப்பற்றிக் கவலைப்படாம படிப்பிச்சு பதிஞ்சிடுவாவாம். அவவை 'சுப்பர் சொனிக்'கெண்டு கூப்பிடுறதாம்; தகப்பன்ர காதில விழுந்தால் அந்தாள் தோலை உரிச்சுப்போடுமெண்டு நான் கண்டபடி கதைக்க விடுகிறதில்லை.

ஏதோ யோசினையில எனக்கு நேரம் போனதும் தெரியேல்ல. இரவுச்சாப்பாடு செய்ய வேணும். பிள்ளையளுக்கு ரியூசன்காசு கட்டி முடிச்சு மிச்சத்தில மற்றத் தேவையள நிறைவேற்றுவது பெரும்பாடு. எங்களுக்கென்ன நிவாரணமா? உதவியா? ஒண்டுமில்லை. தண்ணியத்தவிர எல்லாமே காசுதான். தண்ணியும் கெதியில உப்பாகப் போகப்போகுதெண்டு கதைக்கினம்.

ம்... ஏதோ என்ர குஞ்சுகள் படிச்சுக் கரை சேந்திட வேணும். கடைக்குட்டி என்ர செல்லம், இப்ப கொலசிப் எடுத்துப்போட்டு பல்கலைக் கழக வெட்டுப்புள்ளியைப் பாத்துக்கொண்

டிருக்கிற பெரியவளை விட அங்கலாய்ச்சுக் கொண்டு திரியுது. எங்களுக்கும் நெஞ்சிடி.தான்.

பிறகு நல்ல பள்ளிக்கூடங்களில் இடம் கிடைக்காது. நல்ல பள்ளிக்கூடமெண்டாப் போலதான் நினைவு வருகுது, இந்த மனுசனுக்கு ஒரு நடுத்தரப் பள்ளிக் கூடத்தில தான் வேலை. நல்லா வேலை வாங்கத் தெரிஞ்ச அதிபர். அதுகள் கல்லில நாருரிச்சுப் பிள்ளையள முன்னுக்கு கொண்டு வரப் பாடுபடுதுகள். பெரிய பள்ளிக்குடங்களில தண்ணிகாட்டிவிடுகிற வேலை தானே. சுகியும் பெரிய பள்ளிக்குடத்திலதான் படிக்கிறாள். சிலவேளை இவர் கொப்பியளைப் பாத்திட்டுப் புறுபுறுப்பார். சின்னவனும் சரியா எழுத்துப்பிழை விடுவான். ரீச்சர் சரிபோட்டிருப்பா. நர்ப்பது பிள்ளையளையும் நாடி பிடிச்சுப் பாத்து எழுத்தெண்ணிப் படிப்பிக்க நேரமில்லையாம். கூட்டுக்குள்ள கோழிகள் சுத்தத் தொடங்கிவிட்டுதுகள். இவற்ற சம்பளத்தோட சரிக்கட்ட ஏலாமத்தான் நானும் இதுகளோட மாரடிக்கிறன். அதுகளுக்கான செலவுபோகமிஞ்சுவது பிள்ளையளின்ரை தேவையளைச் சமாளிக்க உதவுது. கூட்டுக்குள்ள முட்டையளைப் பொறுக்கி எடுக்கேக்க சந்தோசம் தான்.



சின்னவன் தான் கடையில கொண்டு போய்க் குடுப்பான், தான் சோதின பாஸ் பண்ணினவுடன பெரிய பள்ளிக் குடத்துக்குப்போக ஒரு சின்னச் சைக்கிள் வாங்கித்தரவேணும் எண்டு. பாவம். அதின்ர ஆசையை நிறைவேற்றவேணும் எண்டு கொஞ்சம் சேத்திட்டன்.

இவருக்குத் தெரியாம ராசமக்காவோடை ஒரு சின்னச் சீட்டும் கட்டுறன். அது பெரியவளுக்கு ஒரு சோடி காப்புச் செய்யவேணுமெண்டு.

மழை மூசாப்பாகக் கிடக்குது. வெளியில கிடக்கிற விறகை எடுக்க இவங்கள் இப்ப வர மாட்டாங்கள். கிறிக்கெட் அடிக்க வெளிக்கிட்டால் இந்திய இலங்கை ஆட்டம் எந்தமூலைக்கு?

அடுக்களைக்குள்ள நுழையிறன். எதைச் சமைப்பது? வளர்கிற பிள்ளையள் சாப்பிட வேண்டிய வயசு. அங்கால இங்கால கடன் கேட்க முடியாத கௌரவமான வாத்தியார் குடும்பம். கிடந்த மாவைக்கொட்டி அவிச்சு அரைகுறையுடன் அன்றைய இரவு விடிஞ்சிது.

பொம்பிளையளுக்கு கூடமாட உதவி செய்தா கௌரவம் குறைஞ்சுபோம் எண்டு நினைக்கிற ஆம்பிளையளில இவர் வித்தியாசமானவர். விடிய எழும்பி வளவு வாய்க்கால் கூட்டி பிள்ளையளின்ரை உடுப்புத் தோச்சுத் தருவார்.

அங்கால அவள் ஒருத்தி பாவம் வங்கியில இருந்து நாரிமுறிய வேலை செய்துபோட்டு வந்து வீட்டில எல்லா வேலையும் செய்ய வேணும். மனுசனோ ஒரு துரும்பும் எடுத்துப் போடாது. அதோட அடக்குமுறை வேறை. அந்தப் பெட்டை படும்பாட்டைச் சொல்லி முடிக்கேலாது.

''என்ன இவர் பேப்பரைக்கொண்டு ஓடி வாறார்?''

''தம்பியின்ர சோதினை முடிவுகள் வெளியாகிவிட்டுதாமப்பா...''

எங்களுக்கெல்லாம் மனம் பதறத்தொடங்கியிட்டுது பிள்ளையளுக்கு ஒருபங்கு எண்டால் பெத்தவைக்குப் பத்துப் பங்குதான் இந்தப் படிப்பு விசயம்.

''கடவுளே என்ரை பிள்ளை பாஸ்பண்ணி விடவேணும், எப்படியும் பழய நேத்தியை முடிச்சுப்போடுவன்''.

நேரம் நடுப்பகலைத் தாண்டிவிட்டது. பள்ளிக்கூடம்போன இளையவன் ஓடிவந்தான்.

''அம்மா நான் பாஸ்பண்ணிப்போட்டன்''.

அன்று எல்லோருக்கும் வயிறு நிரம்பிய மகிழ்ச்சி.

''அம்மா சயிக்கிள்...'' அவன் ஆவலுடன் நினைப்பூட்ட இவர் என்னைப் பார்க்கிறார்.

''ஓம் ராசா கட்டாயம் வாங்கித்தருவன், கொஞ்சம் பொறுத்துக்கொள்'' என்று எந்த வித பற்றுக்கோடுமில்லாமல் அவனை ஆறுதல் படுத்தினேன். பாவங்கள் அதுகள் படிச்சபடிப்பு ஒரு வதைப்பு. அதுக்கும் ஒரு பலன் வேணுந் தானே.

நாட்கள் வழமைபோல நகர்ந்தன.

இவர் பள்ளிக்கூட அனுமதிக்கு இந்தமுறை என்னை அனுப்பிப்போட்டார் ஐயோ எனக்கெண்டா ஏன் வந்தன்எண்டு போச்சுது. ஒரு வழியிலை அவங்கள் சொல்லுறதும் சரிமாதிரிக் கிடக்குது. ஆனா.. எங்களைப் போன்றவையின்ர நிலமையை இவைக்கு விளங்கப்படுத்த ஏலாது. பள்ளிக்கூடத்துக்கு அனுமதிக்க இவ்வளவு தொகையைக் கட்டுறதெண்டால் என்ன செய்யிறது? உத்தியோகத்தற்ற பிள்ளையளுக்கு உதவித்தொகையுமில்லை, ஒரு ஒத்தாசையுமில்லை. இனி பள்ளிக்கூடத்துக்குள்ள வந்துவிட்டால் அதிஸ்டலாபச்சீட்டு அது, இது எண்டு காசு வேணும்.

எனக்கு இந்தத் தொகையை நினைக்க மலைப்பாக் கிடந்தது.

என்னவெண்டு .. எப்பிடி .. எப்பிடி இவ்வளவு தொகையைக் கட்டுறது? அவங்களுக்கு பள்ளிக்கூடத்தை நல்லாக் கொண்டுவரவேணும் எண்டதுக்காக விடாப்பிடியா நிக்கிறாங்கள். என்னென்னவோ தேவையள் பட்டியல்படுத்தப்படுகிது. எனக்கு எதுவுமே விளங்கேல்லை. பின்பக்கத்தால எழும்பிப் போவமா எண்டு பாக்கிறன். எல்லாரும் தங்களுக்குள்ள கதைக்கினமே தவிர எழும்பி ஒருவரும் தங்கட கஸ்ரத்தைச் சொல்லேல்லை. எங்களிட்டை இருந்தால் பள்ளிக்கூடத்துக்குக் குடுக்கிறது பெரிய புண்ணியம்தான்.. இல்லையே... இவர் நான் ஏதாவது கதைச்சுச் சமாளிப்பன் எண்டு தானே என்னை அனுப்பினவர். வீட்டில ஒரு நிமிசமும் என்ர வாய் ஓயிறதில்லை. ஆனா... நான் என்னெண்டு எழும்பி நிண்டு... இவளவு பேருக்குள்ளால கதைக்கிறது...

---

ஒருவர்:- பாத்தியளே...! எங்கடை சனத்திலை அவருக்குள்ள அக்கறையை ..! நிவாரண வெட்டை அரசு அறிவிச்ச உடனை வேலையை விட்டிட்டார்...?

மற்றவர்:- அப்படியா...? என்ன வேலை பாத்தவர்...?

ஒருவர்:- ''சங்கக் கடை மனேச்சர்...!

சின்னை. காண்டீபன்
கொக்குவில்.

என்ர சின்னவன் எவ்வளவு கனவுகளோட பெரிய பள்ளிக்கூடத்துக்கு வர இருக்கிறான். அவனுக்கு கொப்பியள்.. புத்தகப்பை... சப் பாத்து வாங்க ஒரு தொகை தேவை... எனக்கு தலையுக்கை என்னவோ செய்யத்துவங்கியது

என்ர பிள்ளையளைச் சேர்க்க ஏலாமப் போயிடுமோ ..? இலவசக்கல்வி எண்டு புத்த கத்தையும், சீருடையையும் அரசாங்கம் தரா விட்டால், எத்தினைபேர் பள்ளிக்கூடம் பாத்தி ருப்பினம்?

''பெற்றோர் சார்பாக ஏதாவது கருத்துச் சொல்வதாக இருந்தால் எழும்பிச் சொல்ல லாம்'' எண்டு கூட்டத்துக்குத் தலைமை வகித் தவர் சொன்னார். ஒருத்தருமே எழும்பேல்ல. மீண்டும் தங்களுக்குள்ள கதைக்கினம். நான் எழும்பிக் கதைக்கட்டோ ? சீ... என்னெண்டு. எவ்வளவு ஆம்பிளையள் பேசாமலிருக்கினம்!

''நீங்கள் மௌனமாய் இருப்பதில் இருந்து நாங்கள் சொன்ன கருத்துக்களை ஏற்றுக் கொண்டுவிட்டீர்கள் என்றே கருதுகிறோம்; மிக்க மகிழ்ச்சி. இத்துடன் கூட்டத்தை நிறைவு செய்கிறோம்''.

தேவாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

வீட்ட போனா இவர் 'ஏன் கதைக்கயில்லை' எண்டு கேட்கப்போறார். என்னைப் போல கனபேர் தங்கட ஆம்பிளையள் பேசப்போகினம் எண்டு சொல்லிக்கொண்டு போச்சினம். ஆம்பிளையள் வீட்டில ஞாயம் கதைப்பதில வீரர் தானே.

சோர்வுடன் நடந்துகொண்டிருந்தன். திடீ ரெண்டு ஒரு பொறிதட்டியது. சின்னச் சயிக்கி ளுக்கு சேத்த காசுடன் இவற்ரை சம்பளத்தி லும் பாத்துச் சமாளிக்கவேண்டியதுதான்.

இளையவனின்ரை வாடிய முகம் கண்ணில நிழலாட என்ரை விழிகளைத் துடைக்கிறன். ●

---

மனைவி:- டொக்டர், என்னைக் கலியாணம் கட்டின நாளிலிருந்து என் கணவன் கனவில சிரிக்கிறார்.

டொக்டர்:- பரவாயில்லை, அவர் கனவில யாவது சிரிச்சிக்கிட்டு சந்தோசமா இருக்கட்டுமே!

T. லவனி - கைதடியூர்

---

ரகு:- அம்மா என்னை, அடகழுதைமகனே என்று திட்டினா அப்பா!

அப்பா:- அதுக்குப் போய் நீ ஏன் யோசிக் கிறாய்?

ரகு:- இப்ப கழுதை நீங்களா? அல்லது அம்மாவா? என்று தான் யோசிக்கிறன்.

ப. தெய்வேந்திரன்
யாழ்ப்பாணம்.

---

# வலியோரே...!

இரக்க மனம்கொண்ட
இறைவிக்கு இரத்தத்திலாசையோ?
அம்மனோ? அவள் அரக்கியோ?
மிருகம் பலியிடு என
கனவில் சொல்லிப்போன அம்மன்
ஆட்டு ரத்தம் சலித்துப்போக
ஆள் இரத்த ருசிவேண்டி
'உன் கன்னிமகள்
கழுத்தை அறுத்து
காளி எனக்கு பூசைவை' என்றால்
காட்டுமிராண்டி மனத்தாய்
அதையும் செய்வாயோ?
ஆறறிவு படைத்த மனிதரத்தம்
ஆறாய் ஓடுதென்று
ஐந்தறிவு அறியாத
மிருகங்களை பலியிடுதல்
சண்டித்தனமன்றோ சொல்
இத்தனை நாளும்
இந்த எண்ணம் ஏன்வரவில்லை. சொல்?
மெல்லியதிலும் மெல்லியதை
வலியோர் வதைத்தால்
வலியோரே உம்மை
தெய்வம் வதைக்கும்
தெய்வம் வதைக்கும்.

எஸ். மணிவண்ணன்
பருத்தித்துறை.

நதியொன்று சலசலத்துச் சிரித்துக்கொண்டு ஓடியது. துருதுருத்த குழந்தையைப் போல ஓடி, குதித்து, விழுந்து, எழுந்து ஓடியது. வாலைப் பருவத்து வாளிப்பும், மதர்ப்பும், பூரிப்பும் கூட்டுச் சேர்ந்த கொள்ளை அழகுக் குமரி போலவும் அது ஓடியது. குமரிப் பருவத்துக்குறுகுறுப்புத் தணிந்துவிட, புகுந்த இடத்தின் மரபு வழிபட்ட பாரம்பரியங்களையும் பண்பாடுகளையும் போற்றிக் காக்குங் கற்பரசி போலவும் அது ஓடியது.

அதன் குதிப்பிலும், கொள்ளை அழகிலும் நியதி போற்றும் நெறியிலும் ஏதோ ஒன்று உள்ளீடாய், உள்ளுணர்வாய், உயிர்த்துடிப்பாய் நிலைத்து நின்று ஆட்டுவிப்பது போலத் தோன்றியது.

'அந்த ஒன்று எது?'

நதியின் நடுவே குறுக்காக நீண்டு படுத்திருந்தது ஒரு பாறாங்கல். தாயின் மடியிலே குளிர்மையான உள்ள நெகிழ்வோடு முகம் புதைத்துக் கிடக்கும் குழந்தையாய் அது கிடந்தது. அந்தக் குழந்தைக்கு - பாறாங்கல்லுக்குத்தான் இந்தச் சந்தேகம் முளைத்தது.

'அந்த ஒன்று எது?'

அறிவு வளத்துக்கான சந்தேகம் மடிவதில்லை; துருவித் துருவித் தேடும்; ஆராயும். ஆய்வு முடிவுபெறாவிடில், அது சிந்தையிற் புகுந்து புழுவாய்க் குடையும்.

சந்தேகத்தின் குடைதலைச் சகிக்கலாற்றாத நிலை பாறாங்கல்லுக்கு உண்டாயிற்று. யாரையாவது கேட்டுவிடுவோமே என்று எண்ணியது. எண்ணத்தைத் தொடர்ந்து விசாரம் பிறந்தது.

'யாரிடம் கேட்பது?'

ஏன்? அம்மாவிடங் கேட்போமே; அம்மாவிலே தோன்றிய சந்தேகம், அம்மாவிலே தீர்வதுதானே முறை என்று எண்ணியது.

'' அம்மா... ''

ஒரே ஒரு குறியை நோக்கி, ஒரே சிந்தனையாய், தன்னுள்ளே தானே பேசித் தத்துவ விசாரஞ் செய்யும் ஞானியைப் போலே சென்ற நதிக்குக் குழந்தையின் குரல் கேட்கவில்லை. ஒன்றில் ஒன்றிய மனத்தாற் பார்க்கவும் கேட்கவும் முடியாது.

'' அம்மா...... ஓ! என் அம்மா... ''

பாறாங்கல் பெருங் குரலெடுத்துக் கத்தியது. குரல் கேட்டு நதி திரும்பிப் பார்த்தது.



நதியாற் குறிப்பறிய முடிய வில்லை; தாயறியாப் பிள்ளை யாய் விட்டது பாறாங்கல்.

''நீ யார்?'' நதி கேட்டது; ஒன்றில் ஒன்றி நின்ற நிலையிற் குலைவு ஏற்படும்போது தோன் றும் எரிச்சலுடன் கேட்டது. தன் போக்கைத் தடைசெய்யும் ஒரு குறுக்கீடு, தாய் முறை கொண்டாடும் அதிசயத்துடன் கேட்டது.

''அம்மா, என்னைத் தெரி யாதா? தாயறியாக் குல முண்டோ. அம்மா'' பாசக் குழைவுடன் பாறாங்கல் கேட் டது. தாபமும் சிறு கோபமும் அதன் குரலிலே இழையோடிக் கிடந்தன.

காலத்தின் விருந்து மறதி. தடித்த மறதியை நினைவு விலக் கியது. நிகழ்ச்சியொன்று நிழலா கிப் பின் தெளிவு பெற்றது.

'நீண்ட நெடுங் காலத்துக்கு முன் நிகழ்ந்த நிகழ்வு இது. என் வாழ்க்கைப் பாதையிலே எதிர்ப்பட்ட மலையரசனின் பிணைப்பினாலே, அவனமிச மாய்ப் பிறந்த குழந்தை இது; என் மூல ஆசையின் உத்வேகத் தைத் தடைசெய்யும் பாசச் சின் னம் இது; என் மடியிலே புகுந்து கிடந்து என்னுள்ளே என் போக் குக்கெதிரான தேக்கவுணர்வை யுண்டாக்கும் குழந்தை இது.'

இவ்வாறு நதி நினைத்தது.

''குழந்தாய், என்ன வேண் டும்?'' என்றது நதி.

அது, தன்னை மீறிப் பொங்கியெழுந்த அன்பிற்கு ஆட் பட்டு, தன் குழந்தையைக் கட்டித்தழுவி, உச்சிமோந்து, கலீரென ஒலி செய்து வெண் ணுரைப் பற்களைக் காட்டிச் சிந்தை மகிழ்ந்தது ஒரு கணம். அடுத்த கணம், ஆழக்கடலாய், ஆய்ந்தடங்கிய மனமாய், தன் னுள்ளே பேசித் தன்னைக் காணும் யோகியாய்விட்டது. ஏதும் அறியாதது போலத் தன் வழியே செல்லப் புறப்பட்டது.

''அம்மா, நீ எங்கே போகி றாய்? என்னை - என் உடன் பிறப்புக்களை - எங்களை விட்டு விட்டு எங்கேபோறாய் அம்மா?'

''எங்கு போகிறேன் என்றா கேட்கிறாய், குழந்தாய்? நான் என் பதியிடம் போகிறேன்.''

''பதியா? யார் அம்மா உன் பதி... உன் பதி... எங்கள் தந்தை - மலையரசன்...''

''இல்லை, இல்லை, அவர் என் வாழ்வோட்டத்திலே, எதிர்ப்பட்டுப் பிணைந்த ஒன்று. நீயும் உன் சோதரரும் அப் பிணைப்பில் விளைந்த ஒவ் வொன்றுகள்.''

''அப்படியானால், அம்மா''

''என்பதி ஏகமான, விசால மான, ஆழமான கடல்.''

''ஐயோ, அம்மா; உன் வாழ்க்கையில் எதிர்த்துப் பிணைந்தனவற்றையும், விளைந் தனவற்றையும் விட்டுவிட்டு... அன்பில்லாதவளா அம்மா நீ!''

நதி மோகனப் புன்னகை செய்தது. ''வேண்டிய இடத்து வேண்டிய போது வேண்டிய அளவு வேண்டுவனவற்றுக்கு அன்பு காட்டினேன். அந்த அன்பு உண்மையாய், அறிவாய் ஆனந்தமாய் நிறைவுபெற...... என் ஆத்மாவின் பதி அந்த ஏகமான கடல்தான்; என் ஆன்ம அமைதி அதனுடன் இரண்டறக் கலப்பதுதான்'' என்றது.

''அப்படியானால் எங்கள் கதி...'' என்றது கற்பாறை.

''அதை யோசிக்க நான் யார்?'' இவ்வளவு நேரமும் தேங்கி மயங்கி நின்ற நிலையை ஒரு குதிப்பினால் விளிப்பாக்கிக் கொண்டு விரைந்தது

அந்த நதி மீண்டும் சலசலத் துச் சிரித்துக்கொண்டு ஓடியது.

ஒருவர்:- பள்ளிக்கூடப் பெடியன் எல்லாம் ஏன் இப்பிடி ஆர்ப்பாட்டம் பண்ணிக்கொண்டு போறாங்கள்?

மற்றவர்:- பக்கத்திலிருந்த மினித்தியேட்டரை மூடீட் டாங்களாம், படம் பார்க்காம படிக்கேலாது எண்டு ஆர்ப்பாட்டம் பண்ணுறாங்கள்.

ஒருவர்:- ஓம் ஓம், முதலாம் தரத்திலேயே படம் பார், பாடம் படி எண்டுதானே படிப்பிக் கினம்!

காதலிப்பேய்:- அன்பே எமது தேன் நிலவை எங்கே கொண்டாடுவது என்றுதான் ஒரே கவலை.

காதலன்பேய்:- கவலைப்படாதே அன்பே, இருக்கவே இருக்குது செம்மணி,

சனற்குமார்
துன்னாலை.



சூரிய தீபத்தை
ஏற்றிய சூரனார்
சொந்தங்களே
கண்டு சொல்லிடுக!
தொட்டு வணங்குதே நம்மை,
முகிலினம்...!
ஆர்இதை ஏவியோன்...?
சொல்லிடுக?
சாமரம் வீசிடும்
பூமரச் சாதிக்கார்
சம்பளம் பேசினார் கூறிடுக?
தாலாட்டியே...
நிலம் தூங்கவும்... தூங்காத
தாய்அலைக்கு ஆர்துணை
கேட்டறிக?
''யார்துணை''
என்றிருக்காதிவை யாவுமே
தங்கள் கடமையைச்
செய்கின்றன.
'லாபத்துக்காய் எதும் செய்யும்'
மனிதன்போல் இல்லாதிவை
தொழில் செய்கின்றன.
சாதி, நிறம், சமயம்
என்றாரையும்...
தாழ்வுயர் வெண்ணாமல்
பார்க்கின்றன.
வாய்ப்பு வரவில்லை என்றா
உறங்கினாய்...?
வான்மண் உனை எள்ளிச்
''சீ'' என்றன!

வாழ வழிகள் திறந்திருந்தும்,
நீயோ வீழும் திசைகள்
தேடுகின்றாய்.

**த. ஜெயசீலன்**

# பள்ளி எழுச்சி.....

வானம் விரிந்து பரந்திருந்தும்
நீயுன் வல்லமைச் ''செட்டையை''
வெட்டுகின்றாய்!
''சாகும் வரைக்கும் தளர்வறியேன்''
என்று சங்கர்ப்பம் செய்வாய்;
பின்மறப்பாய்!
சக்தி இழந்தபின்
''சங்கரா'' என்பியோ?
சமயமரபின் வரும்?
தேறிடுவாய்!

காலமும் நேரமும் நின்முன்
நிதம் வந்துன்
கண்ணைத் திறந்திடப்
பாடுபடும்.
ககனமோ வாழ்க்கையின்
'தத்துவச்சாரத்தை'
கவிதைபோல்
காட்டிப் புரியவைக்கும்.
சூழலோ...
உந்தன் சுரனதைச் சோதித்து
சொர்க்கத்தை நீ மெல்ல
எட்டவைக்கும்.
சொத்தையாய் வீழ்வதே
சொர்க்கம் என்று
நீயும் சோம்பினால்
தோல்விதான் காதலிக்கும்.

தட்டடா கைகளை,
கொட்டடா பேரிகை!
சாய்கெடு;
துன்பம் தொடர்ந்திடுமா?
தாவிஎழு;
இளந்தாரித் தனத்துடன்
தட்டிநீ கேள்;
பிழை தங்கிடுமா?
குட்டையாய்த் தேங்கி நுளம்புபெருகி..
சீழ்நாறும் மணத்துடன்
உன்மனமா?
கொட்டும் அருவியாய் கொந்தளி,
கொக்கரி!
'கொற்றக்' கடலில்
கலந்திடலாம்.

ஆயிரம் யானைகள்
வீழும் களத்திடை
அன்புக்காய்
நீயொரு சண்டைபிடி
ஆணவம் வீழாது
அதர்மம் ஜெயித்திடில்
அக்கினித் தேவனாய் மாறிஎரி!
மானம்,
அறிவுக்கு எட்டா மகுடங்கள்
மண்ணிலே வீழ...
கவிதைபடி,
மன்னவன் நீயடா!
வையம் உனக்கடா!
வாழலாம்;
உன்காலில் நின்றுபிடி.

# டார்சான்....

வானர மனிதர்களின் அரசன் டார்சான் குறித்து 24 நூல்களும், 39 திரைப்படங்களும், ஆயிரக்கணக்கான 'காமிக்ஸ்'களும் வெளிவந்துள்ளன.

உலகின் அழியாத கதாபாத்திரம் ' டார்சான் '.

சில ஆண்டுகளுக்கு முன் யுனெசெப் (UNICEF) டாக்டர்கள் கச நோய்க்கு எதிரான ஊசி குத்தலை இந்தோனேசியாவில் மேற்கொண்டிருந்தனர். இந்த தற்காப்பு ஊசி ஏற்றுவதைக் கேள்விப்பட்ட இந்தோனேசியாக குழந்தைகள் பயந்து அவ்விடங்களுக்கு வராது ஓடி ஒழிந்தனர். அவர்களது வரு



கைக்காக யுனிசெப் டாக்டர்கள் ஓர் தந்திரத்தைக் கையாண்டனர். ''டார்சானும் சிறுத்தைப் பெண்ணும்'' என்ற சினிமாப்படத்தை உள்ளூர் திரையரங்கில் திரையிட்டு, இந்தத் தற்காப்பு ஊசிகளை ஏற்றிக் கொள்கின்ற சிறுவர்கள் அனைவரும் இந்தப் படத்தை இலவசமாகப் பார்க்கலாம் என்று அறிவித்தனர். இத்தந்திரம் வெற்றி அடைந்தது. சிறுவர்கள், சிறுமிகள், படத்தினைப் பார்க்கின்ற ஆசையில் முண்டியடித்துக் கொண்டு தற்காப்பு ஊசியை ஏற்றிக் கொண்டனர்.

அவ்வளவு தூரத்திற்கு டார்சான் என்ற கதாபத்திரமானது சிறுவர் சிறுமிகளிடையே ஆழப் பதிந்திருந்தது. பெரியோர்கள் கூட டார்சான் என்ற பாத்திரத்தை விரும்புபவர்களாகக் காணப்படுகின்றனர். சினிமா உலகில் உள்ளவர்கள் கூறுகின்றார்கள். 'ஒவ்வொரு நாளும் உலகின் எங்கோ ஓர் மூலையில் டார்சான் திரைப்படம் ஓடிக்கொண்டிருக்கின்றது' என எகிப்தில் உள்ள சினிமா தியேட்டர் ஒன்று கடந்த 20 வருடமாக டார்சான் படம் ஒன்றை தொடர்ந்து திரையிட்டு வருகின்றது. டார்சானை கதாபாத்திரமாகக் கொண்டு இது வரை 24 நூல்கள் வெளிவந்துள்ளன. அவை உலகில் உள்ள 30 மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் இன்றும் அந்த நூல்களை மீண்டும் மீண்டும் படிக்கின்றார்கள் என்பதை அந்த நூல்கள் பல பதிப்புகளாக வெளிவந்ததில் இருந்து அறிந்து கொள்ளலாம். டார்சான் என்ற கதாபார்த்திரத்தைக் கொண்டு இது வரை 39 சினிமாப் படங்கள் வெளிவந்துள்ளன. ஆயிரக்கணக்கான டார்சான் ''காமிக்ஸ்''சுகள் இன்றும் தொடர்ந்து வெளிவந்துள்ளன. தொலைக்காட்சியில் டார்சான் பல்வேறு காலங்களில் கார்ட்டூன் படங்களாகவும், திரைப்படமாகவும் வெளிவந்து உலகின் மக்களைக் கவர்ந்து வருகின்றன. இலங்கையில் கூட டார்சான் ''காமிக்ஸ்''களையும் திரைப்படத்தையும் இரசிப்பவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். வீரகேசரி ஞாயிறு மலர்களில் 10 ஆண்டுகளாக டார்சான் படக்கதை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது.

டார்சான் என்ற கதாபாத்திரத்தை உருவாக்கியவர் ''எட்கார் றைஸ் பொரோ என்பவர் ஆவார். இது ஓர் கற்பனை கதாபாத்திரமாக இருந்த பொழுதும், நம்பத்தகுந்த, உயிர் வாழ்கின்ற ஓர் கதாபாத்திரமாக உருவாக்கிய பெருமை எட்காரைச் சார்ந்த

தாகும். 1950இல் அவர் மரண மடைந்த பொழுது லோஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் இருந்து வெளிவரும் 'ரைம்ஸ்' என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதியது: 'உலகில் மிகச் சில எழுத்தாளர்களே மிக அதிகமான வாசகர்களைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் எட்கார் றைஸ் பொரோ முதன்மையானவர் எனக் கூறுகிறோம். அவர் கல்லூரிக்குச் சென்றதும் கிடையாது, ஆபிரிக்காவுக்குசென்றதும் கிடையாது' டார்சான் என்ற கதாபாத்திரம் உலவுகின்ற பிரதேசம் ஆபிரிக்காவின் அடர் காடுகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. எட்கார் றைஸ் பொரோ ஒரு வகையில் தான் வாழ்கின்ற சூழலில் இருந்து புதியதோர் கற்பனை உலகைச் சிருஷ்டிப்பதற்கு முயன்றிருக்கின்றார். அவரே அதனை ஓர் இடத்தில் வியந்து தெரிவித்து இருக்கின்றார். அவர் பல்வேறு வகைத் தொழில்களில்



ஈடுபட்டு அந்த தொழிற்பாட்டில் திருப்தி காணாது தோல்வி கண்டவர். அவருடைய இரண்டாவது குழந்தை பிறந்த பொழுது ஏற்பட்ட செலவினங்களை ஈடு செய்வதற்காக மனைவியினுடைய நகைகளையும் தன்னுடைய கைக்கடிகாரத்தையும் விற்க நேர்ந்தது. 1911 இல் அவருக்கு வயது 36, மிகுந்த ஏமாற்றம் கொண்டவராக விளங்கிய வேளையில் ஓர் கதை ஒன்றை எழுத ஆரம்பித்தார். இவர் முதல் எழுதிய நாவல் ஓர் விஞ்ஞானக் கதை ஆகும். 'Under the moon of Mars' என்ற நாவலை எழுதி 'All shory magazine' என்ற பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். அது அந்த பத்திரிகையின் 6 இதழ்களில் தொடராக வெளி

வந்தது. 400 அமெரிக்க டொலர்கள் இதற்குச் சன்மான மாகக் கிடைத்தன. அதன் பின் அவர் ஓர் வரலாற்று நாவல் எழுதினார். அது பத்திரிகை களாற் பிரசுரத்திற்கு நிராகரிக் கப்பட்டது. அதன் பின்னர் மக்களைக் கவரத்தக்க புதிய எழுத்துத்துறை என்ன என்பது பற்றித்தான் சிந்தித்தார். அத் தருணத்தில் ஆபிரிக்கா பற்றிய நூல்கள் பலவற்றை சிக்காக்கோ பொது நூலகத்தில் இருந்து எடுத்துப் படித்தார். இருண்ட ஆபிரிக்காக்கண்டத்தின் புராதன மக்களும் அடர்காட்டு விலங்குகளும் இவருக்கு வியப் பான செய்திகளைத் தந்தனர். தான் தெரிந்து கொண்ட இந்த விடயங்களை மக்களுக்கு கதை மூலம் சொல்ல வேண்டுமென ஆசைப்பட்டார். இந்த வேளை தான், டார்சான் என்ற கதா பாத்திரம் அவருக்கு உதயமா கியது. இவர் எழுதிய மூன்றா வது புத்தகம் ''டார்சான் என்ற வானர மனிதன்'' என்பதாகும். இக்கதையை அவர் எழுது வதற்கு ரோமில் வழங்கி வந்த ஓர் ஐதிக கதை உதவி இருக் கின்றது. காட்டில் கைவிடப் பட்ட ரோமூலஸ், ரேமஸ் என்ற இரு குழந்தைகளை ஓர் ஓநாய் பால் கொடுத்து வளர்த் ததாக அந்த ஐதீகம் கூறுகின் றது. அதை தன்னுடைய முதல் கதையில் வேறோர் வகையாக வரித்துக் கொண்டார்,

முதலாவது டார்சான் கதை மிக இலகுவானதாகும். ஜோன் கிளெற்ரொன் என்ற பிரபுவும் அவருடைய மனைவி அலிஸ் என்பவரும் 1888ஆம் ஆண்டு ஆபிரிக்கக் காட்டுப் புறங்களில் பயணப்படுகின்றார் கள். அவ்வேளை அலிஸ் கர்ப்ப முற்று இருக்கின்றார். ஆபிரிக்க காட்டுக் கிராமம் ஒன்றில் குழந்தை பிறந்ததும் அலிஸ் இறந்து விடுகின்றாள். குழந்தை யோடு கிளெற்ரொன் பிரபு தங்கியிருந்த வேளையில் ஓர் ஏப் குரங்கு அவரைக் கொன்று விட்டு அக்குழந்தையைத் தூக்கிச் சென்றது. அக்குழந்தையைத் தூக்கிச்சென்ற அந்த ஏப்குரங்கு அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தது. அக்குழந்தையே டார்சான் என்ற வானர மனித னாக உருவாகின்றான். பல ஆண்டுகளின் பின்னர் ஓர் அமெரிக்க பேராசிரியரும் அவ ருடைய அழகான மகள் ஜேனும் இக்காட்டுக்குள் பயணம் வரு கின்றார்கள். அக்காட்டிலே அவர்கள் பல இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. அந்த இடர்பாடுகளில் இருந்து டார் சான் இவர்களைக் காப்பாற்று கின்றான். டார்சான் மீது ஜேன் காதல் கொள்வதோடு அவனை வானர மனித நிலையில் இருந்து சாதாரண மனித நிலைக்கு மாற்றுகின்றாள். இதுவே டார்சான் பற்றிய முதலாவது நாவலாகும். எட் கார் றைஸ் பொரோ தன்னு டைய டார்சான் நாவல்களில் ஆபிரிக்க காட்டு விலங்குகளை யும் அவற்றின் நடத்தைகளை யும் அங்கு வாழ்கின்ற மக்கள் கூட்டங்களையும் அழகாக அறி முகப்படுத்துகின்றார். காட்டுப் புற வாழ்க்கையை உணர்ந் திராத ஐரோப்பிய மக்கள் இவருடைய நூல்களை விரும்பிப் படிக்கத் தொடங்கினர். டார் சான் பற்றிய முதலாவது நாவல் ஒரு மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியது என்பது குறிப்பிடத்தக்கது. முதலாவது டார்சான் நாவலின் வெற்றியை தொடர்ந்து எட்கார் றைஸ் பொரோ, 24 டார்சான் நாவல் களை தொடர்ந்து எழுதினார். ஓர் முழுநேர எழுத்தாளராக மாறினார். ஆறு வாரங்களில் ஓர் நாவலை அவரால் எழுத முடிந்தது. அவர் தான் எழுதிய நாவல்களை மீள எழுதியது கிடையாது. ஒரே தடவைகளில் அவற்றை எழுதி விடுவார். எழுத்துப் பிழைகளைத் திருத்து வதற்காகவே அவற்றை மீள வாசிப்பார். அவருடைய இந்தக் கதைகள் அனைத்தும் ஆபிரிக் காவை மையமாகக் கொண்டி ருந்த பொழுதிலும் அவர் இந்த இருண்ட கண்டத்திற்கு விஜயம் செய்வதைத் தவிர்த்து வந்தார். 'என்னுடைய மனக் கண்களால் ஆபிரிக்காவை நான் தரிசித்திருக்கின்றேன்' என்று அடிக்கடி கூறியுள்ளார். அவ ரிடம் ஆபிரிக்கா பற்றிய ஏராள மான நூல்கள் அவருடைய நூலகத்தில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

1918-ம் ஆண்டு டார்சான் திரைப்படமாகத் தயாரிக்கப் பட்டது. அர்க்கண்சாஸ் நகரின் சமாதான அதிகாரியாக விளங் கிய 200 இறாத்தல் எடை கொண்ட எல்மோ லிங்கன் என்பவர் அந்தத் திரைப்படத் தில் டார்சானாக நடித்தார். ஒரு மில்லியன் டொலர்களுக்கு மேல் வருமானத்தைத் தேடித் தந்த இந்த முதலாவது டார் சான் படம் லூசியானாவில் தயாரிக்கப்பட்டது. 14 ஆண்டு களின் பின்னர் மெற்றோ கோல்வின் மேயர் (எம்.ஜி.எம்) என்ற தயாரிப்பாளர்கள் மீண் டும் இந்த டார்சான் படத்தைத் தயாரித்தனர். உடல் கூட்டு நிறைந்த ஜோன் வைய்ஸ்முல்லர் என்பவர் டார்சானாக நடித் தார். அதன் பின் வெளிவந்த 12 டார்சான் படங்களிலும் இவரே அப்பாத்திரம் ஏற்று வந்தார்.

இந்த டார்சான் படத்தில் டார்சானுடைய வருகையை அறிவிக்க அவன் உறுமம் சத்தம் இடுவான். இந்தச் சத்தம் ஒரு நாயினுடைய ஊளையையும், ஓர் கழுதைப்புலியின் சிரிப்பை யும் இணைத்து மெற்றோ கோல்வின் மேயரினால் உருவாக் கப்பட்டது. டார்சானின் வரு கையை இச்சத்தம் படத்தில் உறுதிப்படுத்தியது. ஆனால்

உலகில் உள்ள பல்வேறு நாட்டுக் குழந்தைகளும், சிறுவர்களும் இந்தச் சத்தத்தை எழுப்பிக் கொண்டு மரங்களில் ஏறித் தாவிக் காயப்பட்ட சம்பவங்கள் பல உண்டு.

டார்சான் நாவல்களும் திரைப்படங்களும், எட்கார் றைஸ் பொரோவிற்கு மிகுந்த புகழையும், பணத்தையும் சேர்த்துக் கொடுத்தன. அப்படியிருந்தும் ''நான் சராசரி மனிதன்'' என்று அவர் அடிக்கடி கூறிக்கொண்டார். தன்னுடைய நூல்கள் மக்களை மகிழ்விக்கவும், அதன் மூலம் அவர்களுக்குத் தெரியாத ஓர் உலகைத் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றன என்றார். சமூக வாழ்வின் நெருக்கடி நிலைகளிலிருந்து விலகி மகிழ நூல்கள் உதவுகின்றன என்றார். இன்றும் 77 ஆண்டுகளின் பின்னரும் டார்சான் நூல்களைப் படிப்பவர்களும், ''காமிக்ஸ்''களைப் படிப்பவர்களும் திரைபடங்களை இரசிப்பவர்களும் எண்ணிக்கையில் குறைந்து போய்விடவில்லை. காடுகளின் அரசன் டார்சான் என்ற கற்பனைப் பாத்திரம் உண்மையிலேயே உயிரோடு உலாவுவது போலவும், மரங்களில் கொடிகளைப் பற்றியவாறு தாவிச்செல்வது போலவும் காட்டு விலங்குகளைத் தன் அசாதாரணத் துணிச்சலினால் அடக்கி மக்களுடைய துன்பங்களைக்களைவது போலவும் ஏற்படுகின்ற உணர்வு மறைந்து விடவில்லை.

தொகுப்பு: (கலாநிதி க. குணராசா)

# பைத்தியங்கள்....

(சிறுகதை) - சஞ்சயன்

**கோயில்** வாசலே தெரியவில்லை. பரமேஸ்வரன் வாசலில் நின்றான். அவனைச்சுற்றி ஒரே சனக்கூட்டம். பொதுவாக அவன் போட்டிருக்கும் சேட்டும், சாறமும் ஒரே ஊத்தையும் கிழிசலும்தான். இப்போது அவை கந்தல் கந்தலாக அவனது உடலில் மறைக்கவேண்டிய பகுதியைக்கூட மறைக்கப் போதாமல் தொங்கிக்கொண்டிருந்தன அவனது மூக்கிலிருந்தும் கீழ்ப்பகுதி உதட்டிலிருந்தும் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

''உவனுக்கு உதுபோதாது.. நல்லாச் சாத்தவேணும், அப்பதான் விசர் தெழியும்.''

''உவனுக்கென்ன விசரே ? வேற விசர்ல திரியுறான்.''

அந்தக் கூட்டத்தில் பரமேஸ்வரனை அடித்து உதைத்துக் களைத்துப்போன சில வீரர்களின் வாயிலிருந்து வருபவை.

பரமேஸ்வரன் எதுவும் நடக்காததுபோல் நிமிர்ந்து நின்றான். அவனது முகத்தில் எந்தச் சலனமும் தெரியவில்லை.

''உவன் உப்புடித்தான், பொம்பிளையள் போகேக்க வரேக்க அவன்ர பார்வை .. ச்சீ .. த்தூ...''

கோயிலுக்குள்ளிருந்து வெளியே வரும் அம்மா ஒருத்தியின் எரிச்சல்.

பரமேஸ்வரன் அந்தக் கோயில்வீதியில் அலையும் ஒரு பைத்தியக்காரன். எப்பொழுது பைத்தியக்காரனாக இங்கு வந்து சேர்ந்தான்? ஏன் பைத்தியமானான் என்று யாருக்கும் தெரியாது. தெரியவேண்டிய தேவையும் யாருக்கும் இருக்கவில்லை. அவனுடைய ஊரும் தெரியாது, பெயரும் தெரியாது. அந்தக் கோயில் வீதிக்கு வந்ததன்பின் அவனுக்கு யாரோ வைத்த பெயர்தான் பரமேஸ்வரன்.

நாற்பது வயதிற்கு மேலாக இருக்கலாம். கொஞ்சம் கறுத்தும், கொஞ்சம் நரைத்தும் போன தாடி. எப்போதுமே வெட்டிக்கொள்ளப்படாத அழுக்கு அப்பி, திரண்டு உருண்டு பிடலங்காய்கள் தொங்குவது போன்று தொங்கும் சடாமுடியும், தூக்கி மடித்துத் தொடை இரண்டும் தெரியச் சொருகிய - என்ன நிறம் என்று தெரியாத சாறமும், அவன் நிச்சயமாக ஒரு பைத்தியம்தான் என்று காட்டப் போதுமானவையாக இருந்தன.

ஆனால் அவன் நேரெதிராகப் பார்த்தால் எதிர்கொண்டு பார்க்க யாருக்கும் திராணியில்லை. அவன் முகத்தில் கூரிய வெளிச்சமாகத் தெரியும் அந்த இரண்டு கண்களுக்கு மட்டும்

அத்தனை ஒளிப்பிரவாகம். எந்தநேரமும் கீழே பார்த்தும், ஏதாவது சொல்லிக் கொண்டும், இடையிடையே சிரித்துக்கொண்டும் இருப்பான். சிலவேளை நிமிர்ந்து பார்ப்பான். அப்பொழுது ஒரு பிரகாசம். நேராக நிற்பவர் தன்னைத்தான் பார்க்கிறான் என்று நினைப் பார். ஆனால் அவன் பார்வைக்கு எந்தத் தோற்றமும் தென்படுவதாகத் தெரியவில்லை. முன்னிற்பவர் விலகிப் போனாலும் அவன் பார்வை மட்டும் அந்த இடத்திலேயே நிலை குத்தி நிற்கும்.


இன்று நல்ல அடி அவனுக்கு. உதடு உடைந்து வடியும் இரத்தம் அவனது தாடியின் வெள்ளைப் பகுதியை சிவப்பாகக் காட்டியது. அவனுக்கு அதெல்லாம் ஒரு சம்பவமாகக்கூடத் தெரியவில்லை. அந்த மணற்பரப்பில் சரிந்து படுத்திருந்தான். உடல்பாகம் முழுதும் அடங்கி ஒடுங்கி மணலோடு ஒட்டிக் கிடந்தது.

கொள்ள வெளியே ஒரு சங்காபிஷேகம் நடந் தேறியது.

எல்லாவிதமான பூசைகளையும் வாங்கிக் கொண்டும், ஏதும் நடக்காததுபோல், உள்ளே இருக்கும் விக்கிரகங்கள் போல்.. வெளியே பரமேஸ்வரனும் அந்த மணற்பரப்பில் மல்லாந்து கிடந்தான். அண்டவெளியை விழுங் குவது போலிருந்தது அவனது பார்வை.

அந்தக் கோயில் வீதியில் இப்படிப்பட்ட கூச்சல்கள் சர்வசாதாரணம். ஆனால் இது பகல் நடந்திருக்கிறது. இரவு எட்டு மணிக்கு மேல் நடுச்சாமம் வரை இந்தக் கூச்சல்களும், பெண்களின் அந்தரங்கங்களை அசிங்கப்படுத்தும் வார்த்தைகளும் எச்சில் துப்புவதுபோல் காதுக் குள் ஒலிக்கும். சிலவேளை சாமத்தில் பெண் ஒருத்தியின் அவலக்குரல் அயலையே அதிர வைத்து தூக்கத்தைக் கலைக்கும். ஊரடங்கு நேரம் வெளியே எட்டிக்கூடப் பார்க்க விரும் பாது அயல்.

கோயிலின் கிழக்குவீதி மூலையதில் ஏன் இது கிடக்கிறது என்றில்லாமல் ஒரு மடம்... சுற்றிவர அரைகுறையாக மதிற்சுவர். மறை வுக்குச் சில மரங்கள். அதிகமான நாட்களில் ஊரடங்கு நிசப்தத்தையும் மீறி சைக்கிள் சத்த மும் ஆள்நடமாட்டமும் கேட்கும். கோயில் வாசலில் வழிப்பறிக் கத்திக்குத்துகளும் நடை



அன்று, அங்கு
கோயில் வெளிச்சுற்று
வீதியின் ஒரு மூலையில்
படுத்திருந்த பிச்சைக்காரப்
பெண் ஒருத்தியின் காலை
திடீரென்று பிடித்திழுத்
தானாம் பரமேஸ்வரன்.
அவள் வீறிட்டுஅலற,
கோயில்வீதியில் நின்ற
இளைஞர்கள் சிலரோடு
திண்ணைப்பேச்சு
வீரர்களும் சேர்ந்து

பெறும், கேட்பார் யாருமில்லை. முன்னால் சுற்றியுள்ள கடைகளெல்லாம் வருடா வருடம் கப்பம் கட்டுவதுபோல் ஒருதொகை களவு கொடுப்பதற்கென்றே உழைத்தாக வேண்டும். கடைகளை உடைத்து உள்ளே புகுந்து அங்குள்ள கேக், பிஸ்கட் போன்றவற்றைச் சாப்பிட்டு, சோடாக்களை உடைத்துக் குடித்து மீதியை அரைகுறையாக அங்கேயே போட்டுவிட்டு, அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு அங்கிருந்து சர்வசாதாரணமாக திருடர்கள் சென்றுவிடு வார்கள். கடைச்சொந்தக்காரர்களும் தெரிந்தும் தெரியாததுபோல் இருந்து விடுவார்கள். பின் கத்திக்கும் வாளுக்கும் அவர்கள் பதில் சொல்ல வேண்டிவரலாம்.

மாலை ஐந்து மணி தொடக்கம் எட்டு மணிவரை சில குழுக்கள் கூடும் - ''திண்ணைப் பேச்சு வீரர்கள்'' - அதில் கூடுபவர்கள் எல்லோருக்கும் பின்னால் ஒரு சரித்திரமே இருக்கும். அவர்கள் மற்றவர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து போவதற்கு அந்த கோயில் வீதியை ஒரு களமாக அமைத்துக் கொண்டார்கள்.

ஊரில் நடக்கும் சகல உள்வீட்டு விவகாரங்களெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி. காதல் விவகாரங்களிலிருந்து விவாகரத்து வரை .. சாதி சமயம் சம்பந்தமான சகல விடயங்களிலும் அவர்கள் மேன்மை கொண்டவர்கள். அந்தவூர் இளம் பெண்களும், இளைஞர்களும் அவர்களது மழலை மொழியிலிருந்து தப்பவேமுடியாது. அவர்கள் ஒரு வகையில் பல்கலைக்கழகம்தான். இருந்தபோதும் பக்தியில் குறைந்தவர்களல்லர். பூசைக் காலத்தில் கோயில் தொண்டு செய்வதிலும், வெள்ளை வேட்டியுடன் திருநீற்றுப் பூச்சும் சேர மெல்லிய புன்னகையோடு அவர்கள் வீதியில் நடமாடும்போது நமது நாயன்மார்களை நினைவுகூரலாம்.

இன்று கோயிலில் நடந்த அசிங்கம் ஒன்றினைத் தட்டிக்கேட்ட ஒரு பெருமிதத்துடன் கூட்டம் கூடியது.

''உவனை எப்படியாவது இந்த இடத்திலிருந்து அனுப்பவேண்டும்... என்ன அசிங்கம் பட்டப்பகல்ல விசரன்மாதிரி நடிக்கிறான்... இப்படி நடக்க நாங்கள் எனி விடக்கூடாது''

ஒரு பெரியவரின் தீர்மானம்.

''இப்படி இரண்டுதரம் நல்லாக் குடுத்தா இந்த இடத்தைவிட்டு ஓடிப்போயிடுவான்''

வீரப் பேச்சொன்று...

''உவன் திருந்த மாட்டான்''

''அப்ப என்ன செய்யலாம்?''

''பொலிசில கிலிசில புடிச்சுக் குடுப்பம்''

பரமேஸ்வரன் தேர்முட்டியின் வடக்குத் தகரக் கொட்டிலில் சரிந்திருந்தபடி ஏதோ சொல்லிக் கொண்டும்... சிரித்துக்கொண்டும் இருந்தான்.

அவனுக்கு முன்னால் காவியுடையோடு ஒரு பெரியவர் கையில் ஏதோவொரு புத்தகத்தோடு அமர்ந்திருக்க, அவரைச் சுற்றி பத்துப்பன்னிரெண்டு வயோதிபர் உடல் முழுவதும் திருநீற்றுப் பூச்சுடன் அவர் சொல்வதை அடக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அது ஒரு சிறிய வில்வமரத்தடி. அந்த வில்வமரத்து இலைகளை சிலவேளை பூசைக்காகப் பறித்துச்செல்வார்கள். அந்தப் புனித மரத்தின் கீழ் இறைபோதனை நடந்துகொண்டிருந்தது.

அவர்கள் முன்னால் பரவிக்கிடந்த மணல் பரப்பில் தாவிக்குதித்து கலகலவெனச் சிரித்தபடி சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களது சத்தம் தாங்கமுடியாமல் காவியுடன் இருந்த பெரியவர் எழுந்து கோபமாகப் பார்த்தார். அந்தப் பார்வையைப் புரிந்துகொண்ட அதில் இருந்த மற்றொரு வயோதிபர்,

''டேய் உங்களுக்கு விளையாட இதுவே இடம்... போங்கடா அங்காலை'' என்று வெருட்ட,

ஓடித்திரிந்த சிறுவர்கள் மிரண்டுபோய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி குறும்புகள் எல்லாம் அடங்கிப்போக அங்கிருந்து மெல்ல மெல்ல அகன்றுபோனார்கள்.

பரமேஸ்வரன் இவற்றையெல்லாம் கண்டானோ என்னவோ ஒரு வேறு உலகத்தில் இருப்பதுபோன்று, தன்னுள் சிரித்துக் கதைத்தபடி இருந்தான்.

''சரி பொலிசில ஒரு பொட்டிசம் எழுதிப் போடுவம் - அதெண்டா ஒரு பிரச்சனையும் இல்ல. பேந்து நாங்கள் எல்லாம் பொலிஸ் ரேசன் போறது மரியாதையில்ல.''

இப்போது ஒரு முடிவு எடுத்தாகிவிட்டது.

''பின்வீதியில ஏதோ சண்டையாம்.''

அவர்களது கூட்டத்தில் கொஞ்சம் பிந்தி வந்த ஒருவர் கூற, எல்லோருடைய முகத்திலும் ஒரு பீதி வெளிப்பட்டது.

இதுவும் இங்கு வழமையானதுதான். மாலை நேரத்தில் கோயில் தென்மேற்கு வீதியில் ஒரு சயிக்கிள் கூட்டம் கூடும். சுற்றிவர உள்ள ஊர்களிலிருந்து இருபது முப்பது இளசுகள் வந்து அந்த இடத்தில் கூடுவார்கள். அது ஒரு நாற் சந்தி. 'ரியூச'னால் வரும் பெண்பிள்ளைகள் அதைக் கடந்துதான் செல்வார்கள். அதில் நின்றபடி கேலிப்பேச்சுகளும், சேட்டைகளும் இருளும்வரை தொடரும். எனக்கு உனக்கு என்று ஏதாவது பிரச்சனை கிளம்பும்போது சண்டை மூளும். வேலிக் கதியால்கள் முறியும். அடிபாடு - மீண்டும் மறுநாள் அதே சைக்கிள் கூட்டம் கூடும்.

''வேலிக்கதியாலை முறிச்சு அடிபட்டாங்களாம்''.

''ஒருத்தன்ரை மண்டை உடைஞ்சு ரத்தம் ஓடுதாம்-சேட்டெல்லாம் நனைஞ்சுபோச்சாம்.''

'' சே... அப்பிடியெண்டா அது வாள் வெட்டாகத்தானிருக்கும்.''

கூட்டத்தில் பீதி அதிகரித்தது.

எல்லோரும் ஒருமித்து எழுந்தார்கள். வெள்ளைவேட்டியில் ஒட்டியிருந்த வீதி மணலைத் தட்டிவிட்டு,

''ஏன் வீண்சோலி, நாளைக்குப் பாப்பம்.''

தங்கள் தங்கள் திசையில் போய்க்கொண்டிருந்தார்கள்.

பரமேஸ்வரன் வழமைக்குமாறாகக் கோயில் வீதியே அதிர உரத்த குரலில் ஒரு சிரிப்புச் சிரித்தான்.

நடந்துகொண்டிருந்த அத்தனை பெரியவர்களும் திகைத்துப்போய் சிரிப்புவந்த திசையைத் திரும்பிப்பார்த்தார்கள். தங்களைத்தான் அவன் கேலிசெய்கிறானோ என்ற சந்தேகம். ஆனாலும் இப்போது பரமேஸ்வரனைக் கவனிக்க அவர்களுக்கு நேரம் இல்லை. பரமேஸ்வரன் யாரையும் கவனித்ததாகத் தெரியவில்லை.

மறுநாள் காலை ஐந்துமணிப் பூசை கோயில் மணியோடு ஆரம்பமானது பக்தர்கள் கூட்டம் முட்டிமோதிக்கொண்டு ஒவ்வொரு விக்கிரகத்திற்கும் நடக்கும் பூசையை முண்டியடித்துக் கொண்டு பக்திப்பரவசத்தோடு கைகளைத் தலைக்குமேலுயர்த்திப்பிடித்தபடி 'அரோகரா, அரோகரா' என்று உரக்கக் கூவிக்கொண்டிருந்தார்கள்.

பூசையும் முடிந்தது. விடிந்தும் விடியாத மங்கல்பொழுது. பக்தர்கள் உள்ளே இருந்து வெளியே வந்தார்கள். வந்த வேகத்தில் ஏதோ ஒன்று தடக்கி ஒருவர் விழுந்துவிட்டார்.

'' இதாரப்பா வாசல்ல கிடக்கிறது...''

விழுந்தவர் எழுந்து வாசலில் மல்லாக்காகக் கிடக்கும் உருவத்தை உற்றுப்பார்த்தார். அந்த மங்கலான பொழுதிலும் சூரியவெளிச்சம்போல் முகம் பிரகாசமாகத் தெரிந்தது.

மற்றப் பக்தர்களும் கூடிவிட்டார்கள்.

'' அது பரமேஸ்வரன். ''

'' ஆள் முடிஞ்சுது. ''

வானத்தை நோக்கி நிமிர்ந்துகிடந்தான் பரமேஸ்வரன். அவன் கண்கள் விழித்துப் பார்த்தபடியே இருந்தன. உடல்மட்டும் விறைத்துப்போய் அந்த மணலில் முழுவதுமாக ஒட்டிப் போய்க் கிடந்தது.

எல்லோரும்ஒருமுறை அவனை உற்றுப்பார்த்தார்கள். ஒருகணம், அவன் முகத்தில் ஒரு ஒளி வீசித் தெறித்தது. அந்தத் தெறிப்பில் அப்படியே அதிர்ந்துபோய் நின்றார்கள். ஒரு நொடிப்பொழுதுதான். மின்சாரத்தில் கைவைத்தது போல் பதறினார்கள். நீருக்குள் தலையை அமிழ்த்திக்கொண்ட நிலையில் திணறிப்போய் உயிர்மூச்சு ஒருகணம் நின்றதுபோல், அந்தக் கண் இமைக்கும்நேரத்தில் வானவெளியெல்லாம் சென்றுவந்ததுபோல், எங்கேயோ பெரும் ஒளி ஒன்றில் கலந்துவிட்டதுபோல், எல்லோரும் பிரமைபிடித்ததுபோல் - என்ன நடக்கிறது என்று நினைக்க முடியாமல் - மறுகணம் சுயநினைவுக்கு மீண்டார்கள்.

'' ஓ..... உந்த மணலிலதான் யோகரும் செல்லப்பரும் ஞானம் பெற்றவை. ''

அந்த மங்கல் வெளிச்சத்தில் அதில் ஒருவரின் குரல் மெதுவாக வெளிப்பட்டது.

□

உங்கள் தேவைகள்! எங்கள் சேவையில்!!

மும்மொழிகளிலும்
தரமான அச்சுப்பதிப்புக்களை
வர்ணப்பதிப்பில் செய்துகொள்ள

# போஸ்கோ பதிப்பகம்

252, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Manufacturer of
Exercise Books,
School Practical Books,
Account Books,
Letter Pads & Autograph.

DISTRIBUTORS OF STATIONERIES.

# BOSECO

3, Modern Market,
Hospital Road,
JAFFNA.




யாழ். நகர மக்களே!

நியாயம் கிடைக்கவில்லையா?

தரத்தில்! விலையில்! உபசரிப்பில்!

இதோ!

அதனை உங்களுக்கு வழங்கவென
யாழ். நகருக்குள் வந்துவிட்டார்கள்.

# V. S. B. GROUP

# வி. எஸ். பி. குறூப்

(மொத்த சில்லறை விற்பனையாளர்கள்)

உங்கள் தேவைமட்டுமே
எங்கள் சேவை!